KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 09 மே 2025 இதழ்:- 19

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the
Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvale Dr. Markham, ON. L3S 4N8

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## தமிழர் தேசம் தமிழரசோடு! உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் உள்ளே!

இலங்கை தமிழரசுகட்சி பலவீனமடையவில்லை தமிழ்தேசிய கூட்டமைப்பாக சேர்ந்து இருந்ததை விட தற்போது தனியாக பலமாக வெளி வந்திருக் கின்றது என இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம் ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டு ள்ளதாவது –

கடந்த தேர்தல்களிலே தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆணை கிடைத்திருக்கவில்லை. 25வீத வாக்குகளை மாத்திரம் எங்கள் யாழ்ப்பாணத்திலே பெற்று விட்டு தங்களிற்கு மக்கள் ஆணை(5ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

ஈழநாடு
எதிர்பாருங்கள்! ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை விபரங்கள் உள்ளே!

# நிரந்தரமான அரசியல் தீர்வுக்கு மீண்டும் தமிழ் மக்கள் ஆணை!
## உள்ளூராட்சி தேர்தல் வெற்றி குறித்து மட்டுநகர் முதல்வர் சாணக்கியன்

நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வினை அடைய வேண்டுமென்ற எங்களுடைய இலக்கிற்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீண்டும் ஆணையை தந்திரு க்கிறார்கள் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முடிசூடா மன்னனுமாகிய இரா.சாணக்கியன் தெரிவித்தார். மட்டக்களப்பில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் அலுவலகத்தில் 07 மே 2025 பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில், 2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசு கட்சியானது வடக்கு கிழக்கிலே அமோகமான வெற்றியைப் பெற்றிருக்கிறது. நாடு யாரிடமாவது இருக்கட்டும், தமிழர் தாயகம் தமிழரசோடு என்பது நாங்கள் தேர்தல் பரப்புரை காலத்தில் சொன்னதற்கமைய வடக்கு, கிழக்கிலே இருக்கின்ற மக்கள் எங்களுக்கு அமோகமான வெற்றியைத் (9ம் பக்கம் பார்க்க)



# பட்டு வேட்டிக் கனவில் கோவணமும் உருவப்படுவதை நாம் உணரவில்லை


# வடக்கு கிழக்கு மாகாணங்களில் நாங்கள் பின்னடையவில்லை- பிமல்

THINKING OF
# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com
*Your neighborhood sales representative*

PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

RE/MAX REALTRON Realty Inc. Brokerage
Home of the Top Producers



**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com



**Piravien Siva**
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com


22 Years Real Estate Experience

885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated
Bus: 416-289-3333

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


**Warden/Finch**


Scarborough $424,900
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school


**Kennedy / Hwy 401**

Scarborough $429,900
1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit


**Markham / Sheppard Ave**

Scarborough $479,000
1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse

**McCowan / Ellesmere**

Scarborough $599,000
2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC


**Mccowan & Hwy 401**

Scarborough $549,900
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views


**Kennedy / 401**

Scarborough $538,000
2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining


**Simcoe St / 401**

Oshawa $575,900
3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft


**Grandview Dr. / Bloor**

Oshawa $649,800
2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated

**9TH LINE / HIGHWAY 7**

Markham $1,100,000
4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse

**Dixie/ Glenanna**

Pickering $799,000
3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities

**Audley Rd & Rossland Rd E**

Ajax $799,000
3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse


**Markham & Ellesmere**

Scarborough $1,050,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance


**Morningside/Mcnicol**

Scarborough $1,099,900
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout

**401/Morningside**

Scarborough $1,249,000
4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407

**10th Line/ Hoover Park Dr**

Stouffville $1,499,999
4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed

**9th Line/Hoover Park**

Stouffville $999,000
4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் சொல்வது என்ன?





வடக்கு கிழக்கில் தமிழ்க் கட்சிகள் மீண்டும் முன்னிலை பெற்றிருக்கின்றன. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்றிருந்த தேசிய மக்கள் சக்தி பின்னடைவை சந்தித்திருக்கின்றது. இந்த நிலைமையை தமிழ்த் தேசியத்தின் வெற்றி என்று அழுத்திக் கூறுவது சரியானதா?

நிச்சயமாக இல்லை. ஏனெனில், இவ்வாறான வாக்களிப்புகள் கடந்த காலத்திலும் இடம் பெற்றிருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்த காலத்தில் இதனை விடவும் திரளாக தமிழ் மக்கள் கூட்டமைப்பின் பின்னால் நின்றி ருக்கின்றனர். அதனால் அரசியலில் என்ன மாற்றம் நிகழ்ந் தது? இந்தக் கேள்விக்கு, இல்லை என்பதைத் தவிர வேறு சிறப்பான பதில் இருக்க வாய்ப்பில்லை.

ஒரு பிரதான எதிரியை காண்பித்து அச்சத்தை ஏற்படுத் தினால் தமிழ் வாக்காளர்களை வளைக்க முடியும் என்னும் தந்திரோபாயம் தமிழ் கட்சிகளுக்கு கை கொடுத்திருப்ப தாகவே தெரிகின்றது.

தேசிய மக்கள் சக்தி தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் விரக்தியும் சங்கடமும் ஏற்பட்டமைக்கு ஒரு பிரதான காரணம் உண்டு. அதாவது, தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவம் செய்யும் வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பற்ற பேச்சும், செயலுமே பிரதான காரணங்களாகும்.

அவர்கள் அதிகம் பொறுப்புடனும், நிதானமாகவும் பேசி யிருந்தால், தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்டளவு ஆதரவை பெற்றிருக்கவும் வாய்ப்பிருந்தது. ஆனாலும், வடக்கு மகாணத்தில் இரண்டாவது நிலையில் தேசிய மக்கள் சக்தி இருக்கின்றது என்பதையும் இலகுவில் தவிர்த்துச் செல்ல முடியாது.

அதேவேளை தமிழ்த் தேசிய அரசியலை முன்னிலைப்படுத் தும் தமிழ்க் கட்சிகள் முடிந்த வரையில் அதிகம் இணை ந்து போட்டியிட்டிருந்தால், தேசிய மக்கள் சக்தி இன்னும் பின்னுக்குச் சென்றிருக்கும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், மாகாண சபைத் தேர்த லில் தமிழ் கட்சிகள் என்போர், வழமை போல், தங்களுக்குள் சண்டையிட்டு, பிரிந்து போட்டியிட்டால் மாகாண சபைத் தேர்தலில் நிச்சயம் பின்னடைவை சந்திக்க நேரிடும். ஒரு வேளை சைக்கிள் சின்ன அணியினர் இணைந்து போட்டி யிடுவதைத் தவிர்த்தாலும் கூட ஏனைய கட்சிகள் ஓரணி யாக போட்டியிட வேண்டிய தேவை தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும்.

அரசியலில் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாலான நிர்ப்பந்த ங்கள் என்று ஒன்றிருக்கின்றன. அரசியலில் நிர்ப்பந்தங்களை, அரசியல் தலைவர் என்போர் நிராகரித்துச் செயல்படுகின்ற போது, அதன் விளைவுகளை அனைவருமே சுமக்க நேரிடும்.

கடந்த காலத்தில் நிகழ்ந்த விடயங்கள் இதற்கு சிறந்த சான்றாக இருக்கின்றன. எனவே உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியை ‘தமிழர் தாயகம் தமிழரசோடு’ என்றவாறு, உணர்ச்சி வசமாக கொண்டாட முற்படாமல், நிதானமாக வும் தூரநோக்குடனும் விடயங்களை ஆராய்வதற்கான வாய்ப்பாகக் கொள்வதுடன், எதிர்காலத்தை கருத்தில் கொண்டு செயல்படுவதற்கான பாடமாகவும் இதனைக் கொள்ள வேண்டும். அரசியலில் கிடைக்கும் ஒவ்வோர் அனுபவங்களிலிருந்தும் கற்றுக்கொள்ள மறுத்தால், தொட ர்ந்தும் பின்னடைவுகள் மட்டுமே நிரந்தரமானதாக இருக்கும்.

# புதிய பாப்பரசராக அமெரிக்காவின் ரொபர்ட் பிரிவோஸ்ட் தெரிவானார்

புதிய பாப்பரசராக அமெரிக்காவின் ரொபர்ட் பிரிவோஸ்ட் தெரிவானார் இரண்டு நாட்களாக இடம் பெற்ற இரகசிய வாக்கெடுப்பை தொடர்ந்து வாத்திகானின் நேரப்படி நேற்று மாலை புதிய பாப்பரசராக அமெரிக்காவின் ரொபர்ட் பிரேவோஸ்ட் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அதன்படி அவருக்கு பாப்பரசர் லியோ என்று பெயரிடப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. 69 வயதான பாப்பரசர் லியோ, அமெரிக்காவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பாப்பரசராக வரலாற்றில் இடம்பெற்றுள்ளார். அதன்படி உலகளவில் 1.4 பில்லியன் கத்தோலிக்க மக்களின் தலை வராக பாப்பரசர் லியோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


புதிய போப்பாண்டவாராக அமெரிக்கரான லியோ ஓஐஏ என்றழைக்கப்படும் கர்தினால் ரொபர்ட் பிரீவோஸ்ட் தேர்ந் தெடுத்த செய்தியை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கொண்டாடியுள்ளார். அத்துடன் போப்பாண்ட வாராக தெரிவு செய்யப்பட்ட ரொபர்ட் பிரீவோஸ்டுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் ட்ரம்ப் கூறியுள் ளார்.

இது தொடர்பில் தனதுஉத்தியோகபூர்வ எக்ஸ் கணக்கில் அவர் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் மேற்கண்ட விடயங்களை குறிப்பிட்டுள்ளார். அவர் முதல் அமெரிக்க



போப் என்பதை உணர்ந்தது மிகவும் பெருமையாக இருக் கிறது. என்ன ஒரு உற்சாகம், நம் நாட்டிற்கு என்ன ஒரு பெரிய மரியாதை. போப் லியோ XIV ஐ சந்திப்பதை நான் ஆவலுடன் எதிர்நோக்குகிறேன். இது மிகவும் அர்த்தமுள்ள தருணமாக இருக்கும்!’ என அவர் தனது பதிவில் மேலும் தெரிவித்துள்ளார். அமெரிக்க துணைத் ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் முதல் அமெரிக்க போப்பாண்டவராக லியோ XIV தேர்தெடுக்கப்பட்டமைக்கு வாழ்த்தியுள்ளார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# உள்ளூராட்சி சபைத் தேர்தல் 2025
# அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி சாதனை!



உள்ளூராட்சி சபைத் தேர்தல் – 2025 இல் நாடு முழுவதும் பெறப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி அதிகப்படியான வாக்குகளை பெற்று சாதனை படைத்துள்ளது.

அதன்படி, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் தலைமையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்கிய தேசிய மக்கள் சக்தி (NPP) கட்சியானது 4,503,930 வாக்குகளையும் 3,927 உறுப்பினர்களையும் பெற்று வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாவது நிலையாக, எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி 2,258,480 வாக்குகளையும் 1,767 உறுப்பினர்களையும் பெற்றுக் கொண்டது.

2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 4.94 மில்லியன் வாக்குகளைப் பெற்று நாட்டின் அரசியல் களத்தில் ஆதிக்கம் செலுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி 2025இல் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 954,517 வாக்குகள், 742 உறுப்பினர்களை பெற்று பின்னடைவை சந்தித்திருக்கிறது.

2018இல் களத்தில் இறங்கி 693,875 வாக்குகளைப் பெற்றும், பலமற்ற கட்சியாக இருந்த மக்கள் விடுதலை முன்னணி, தற்போது நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 43.26 வீத வாக்கு எண்ணிக்கையான 4,503,930 வாக்குகளையும் 3927 உறுப்பினர்களையும் பெற்று சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவுகள் நிறைவடைந்துள்ள வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் தேசிய மக்கள் சக்தி வடகிழக்கில் எதிர்பார்ப்புக்கு மாறாக பின்னடைவை சந்தித்துள்ளது.

முன்னதாக நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வடகிழக்கில் பெருவாரியான வெற்றியை பெற்றிருந்தது. அதனை தொடர்ந்து உள்ளூராட்சி தேர்தலிலும் அத்தகைய வெற்றியை பெறுமென்ற எதிர்பார்ப்பு எழுந்திருந்தது. எனினும் தென்னிலங்கையில் வெற்றியை தக்க வைக்க முடிந்த தேசிய மக்கள் சக்தி வடகிழக்கில் தோல்வியை சந்தித்துள்ளது.

இலங்கை முழுவதுமாக 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கு நடத்தப்பட்ட தேர்தலில் 49 அரசியல் கட்சிகள் மற்றும் 257 சுயேட்சை குழுக்களைச் சேர்ந்த 75,589 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர்.

தேர்தலில் வாக்களிக்க 17,மில்லியன் வரையிலான வாக்காளர்கள் தகுதி பெற்றிருந்த நிலையில் யாழ்ப்பாணம் 56.6% முல்லைத்தீவு – 61.32 மன்னார் – 70.15 மற்றும் வவுனியா – 59.65 கிளிநொச்சி 61வாக்குகளே பதிவு செய்யப்பட்டிருந்தது.

கிழக்கில் மட்டக்களப்பு — 61வீத திருகோணமலை — 67வீத வாக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 06 மே 2025 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிக்கவில்லை என தகவல் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுகயீனம் காரணமாக உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு செல்லவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி மாத்திரமே மெதமுலன டீ.ஏ.ராஜபக்ஷ மகா வித்தியாலயத்தில் தனது வாக்கினை பதிவு செய்திருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷ சுகயீனம் காரணமாக அண்மையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ள நிலையில் வைத்திய ஆலோசனைகளின்படி தனது வீட்டில் ஓய்வெடுத்து வருதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# யாழ்மாநகரத்திற்கு விலை போகாத முதல்வர் வேண்டும்! தேசிய மக்கள் சக்தியுடன் டீலுக்குச் செல்வோர் துரோகிகள்!

## வேட்பாளர் பட்டியலையே ஒழுங்காக நிரப்பத் தெரியாத மணிவண்ணன் தெரிவிப்பு!

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வராக வர கூடியவர் விலை போகாதவராக தமிழ் தேசிய பற்றுடன் செயற்பட கூடியவராக இருக்க வேண்டுமாம் என யாழ் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்

யாழ் ஊடக அமையத்தில் 08 மே 2025 வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் யாழ் . மாநகர சபை முதல்வர் பதவி என்பது மிக முக்கியமானது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட முக்கியமானது. நாடளுமன்ற உறுப்பினரை விட சிறப்பாக செயற்பட கூடியவராக இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற் கொள்ளும் இராஜதந்திரிகள் யாழ்ப்பாண முதல்வரை நிச்சயம் சந்திப்பார்கள். அவ்வாறானவர்களுடன் இராஜதந்திர ரீதியாக உரையாட வேண்டும். யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்க கூடிய அபிவிருத்தி திட்டங்கள், தமிழ் மக்களின் அபிலாசைகள் , அவர்களின் பிரச்சனைகள் என்பவற்றை எடுத்து கூற வேண்டும்.

எனவே முதல்வராக தமது கட்சி சார்பாக முன்னிலைப்படுத்தப்படுவர் சிறப்பானவராக இருக்க வேண்டும் என கட்சிகள் பொறுப்புடன் உணர்ந்து கொண்டு அதற்கு ஏற்றது போல் முதல்வரை தெரிவு செய்ய வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

அத்துடன் தமிழர் தாயகத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் டீல் பேசி ஆட்சி அமைப்போர் தமிழின துரோகிகள் என யாழ் . மாநகர சபை முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழர் பிரதேசங்களின் சில இடங்களில் தேசிய மக்கள் சக்தியும் கணிசமான ஆசனங்களையும் பெற்றுள்ளார்கள். அவர்களுடன் தமிழ் தேசிய கட்சிகள் கூட்டிணைந்து ஆட்சி அமைக்க கூடாது.

தேசிய மக்கள் சக்தியினரை புறக்கணிக்க வேண்டும் என நாம் உட்பட ஏனைய தமிழ் தேசிய கட்சிகளும் மக்களிடம் கோரி வந்தன அதனை மக்கள் ஏற்று பல இடங்களில் தேசிய மக்கள் சக்தியை புறக்கணித்துள்ளார்கள்.




தற்போது சபைகளில் ஆட்சி அமைக்கும் போது அவர்களாக ஆதரவு வழங்குவது அவர்களின் ஜனநாயக உரிமை. ஆதரவு தருகிறோம் என்பவரை ஆதரவு தராதே என கூற முடியாது. ஆனால் ஆதரவு தாருங்கள் துணை பதவிகளோ இந்த சபைக்கு ஆதரவு தாருங்கள். அந்த சபைக்கு நாம் ஆதரவு தருகிறோம் என்பது போலான டீல்கள் செய்து, அந்த கட்சியுடன் இணைந்து தமிழ் தேசிய கட்சிகள் ஆட்சி அமைந்தால் அது தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகம் என மேலும் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் விண்ணப்பப் படிவங்களையே ஒழுங்காக நிரப்பத் தெரியாமல் அனைத்து விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படக் காரணமான பிரபல சட்டத்தரணி மணிவண்ணன் இப்போது துரோகி, தியாகி, என்று உலுத்துப் போன கதைகளைக் கூற முற்படுகின்றார். திருந்துகின்ற எண்ணமே இவர்களுக்குக் கிடையாது போலும்.

# தமிழரசுக்கட்சி தனியாக பலமாக வெளி வந்திருக்கிறது




இலங்கை தமிழரசுகட்சி பலவீனமடையவில்லை தமிழ்தேசிய கூட்டமைப்பாக சேர்ந்து இருந்ததை விட தற்போது தனியாக பலமாக வெளி வந்திருக்கின்றது என இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம் ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது –

கடந்த தேர்தல்களிலே தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆணை கிடைத்திருக்கவில்லை. 25வீத வாக்குகளை மாத்திரம் எங்கள் யாழ்ப்பாணத்திலே பெற்று விட்டு தங்களிற்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது என அவர்கள் தெரிவித்தது தவறான கருத்து ஆனால் தனியொரு கட்சியாக 2018 இல் தமிழ்தேசிய கூட்டமைப்பாக நாங்கள் போட்டியிட்டு பெற்ற வெற்றியை விட தனியாக இம்முறை நாங்கள் போட்டியிட்டு பெற்ற வெற்றி மேலானது.

நான் கடந்த காலங்களில் கூறி வந்திருக்கின்றேன் ஒரு கட்சி தனியாக போட்டியிடுவதை தவிர்த்து ஒன்றாகயிருக்கின்ற கட்சிகள் தனித் தனியாக போட்டியிட்டு பின்னர் நிர்வாகங்களை அமைப்பது சாத்தியமானது என. அந்த கணக்கு தற்போது பலருக்கு புரியும் புரியவரும்.

கூட்டமைப்பை உடைத்து விட்டோம் என சொல்பவர்களுக்கும் இந்த தேர்தல் முடிவுகள் சரியான பாடத்தை படிப்பித்திருக்கும்.

இலங்கை தமிழரசுகட்சி பலவீனமடையவில்லை தமிழ்தேசிய கூட்டமைப்பாக சேர்ந்து இருந்ததை விட தற்போது தனியாக பலமாக வெளி வந்திருக்கின்றது.

ஆகவே தற்போது தமிழ்தேசிய கூட்டமைப்பிலே இருந்தவர்கள் தற்போது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பாக உள்ளனர் அவர்களும் எதிர் காலத்தில் எங்களிற்கு வாய்ப்பளிக்கின்ற போது எல்லா இடங்களிலும் நாங்கள் இவ்வாறான நிலையை சந்திக்கக் கூடியதாகயிருக்கும்.

யாழ்ப்பாணம் மாநகர சபையைப் பொறுத்த வரை இலங்கை தமிழரசுக் கட்சிக்கே அதிகளவான ஆசனம் கிடைக்கப் பெற்றது. ஆகையால் மாநகர முதல்வர் பதவி இலங்கை தமிழரசுக் கட்சிக்கே உரித்தானது. ஏனைய கட்சிகள் அதனை அனுசரித்து எமக்கான ஆதரவை கொடுக்க வேண்டும் என்பது எங்களுடைய வேண்டுகோள் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழ்மக்கள் அநுர மீது வைத்துள்ள நம்பிக்கை அப்படியே தொடர்கின்றது



ஜனாதிபதி மீதும், எம் மீதும் தமிழ் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை அப்படியே தொடர்கின்றது. மக்களின் எதிர்பார்ப்புகளை எம்மால் நிச்சயம் நிறைவேற்ற முடியும் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

'பொதுத் தேர்தலென்பது வேறு, உள்ளூராட்சி சபைத் தேர்தலென்பது வேறு, எனவே, உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவுகளுடன் தான், உள்ளூராட்சிசபைத் தேர்தலை முடிவை ஒப்பிட வேண்டும்.

அந்த அடிப்படையில் பார்த்தால் 2018 தேர்தலில் வடக்கில் விரல் விட்டு எண்ணக்கூடிய வகையில் தான் தேசிய மக்கள் சக்திக்கு பிரதிநிதித்துவம் இருந்தது. ஆனால் இம்முறை வடக்கில் எல்லா பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்திக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெற்றுள்ளது. இது வரலாற்று முக்கியத்துவம்மிக்க விடயமாகும். எனினும், மக்களை பிரித்தாள்வதற்கு முற்படும் அரசியல் வாதிகளுக்கு இது பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் தான் தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டதாக போலி பிரச்சாரம் முன்னெடுத்து இன்பம் காண்கின்றனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீதும், எம் மீதும், எமது அரசாங்கம் மீதும் தமிழ் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை அப்படியே தொடர்கின்றது. மக்களின் எதிர்பார்ப்புகளை எம்மால் தான் நிச்சயம் நிறைவேற்ற முடியும் என்பது அவர்களுக்கு தெரியும். நிச்சயம் அதனை செய்வோம். அதற்குரிய அடித்தளம் தற்போது இடப்பட்டு வருகின்றது. எனவே சதிகார அரசியல்வாதிகளால் எம்மையும், மக்களையும் பிரிக்க முடியாது. இலக்கை நோக்கிய எமது பயணம் தொடரும். உள்ளூராட்சிசபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த அத்தனை சொந்தங்களுக்கும் நன்றிகள். அதேபோல வாக்களிக்காதவர்களுக்கும் எமது சேவைகள் தொடரும் என மேலும் தெரிவித்தார்.

# யூன் 2க்கு முன் மேயர்களை நியமிக்கவும்

உள்ளாட்சி அமைப்புகளில் 50வீதத்துக்கும் மேற்பட்ட இடங்களைப் பெற்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு ஜீன் 2ஆம் திகதிக்கு முன்னர் மேயர்களை நியமிக்கவும், நியமிக்கப்பட வேண்டிய பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அறிவிக்கவும் தேர்தல் ஆணைக்குழு எதிர் பார்த்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மொத்தம் 339 உள்ளாட்சி அமைப்புகளுக்கான மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான உள்ளூராட்சித் தேர்தல் 06 மே 2025 காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது. இந்த நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஊடகம் ஒன்றுக்குத் தேர்தல் ஆணையத் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க கூறியதாவது, உள்ளூராட்சி அமைப்புகளில் 50வீதத்துக்கும் மேற்பட்ட இடங்களைப் பெற்ற தொடர்புடைய அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு வரும் நாட்களில் தலைவர்கள் மேயர்களை நியமிக்க அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும். கூடுதலாக, ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புக்கும் நியமிக்கப்பட வேண்டிய பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கப்படும். மேற்கூறிய ஏற்பாடுகள் முடிந்ததும், உள்ளூராட்சி பிரதிநிதிகளின் இறுதிப் பட்டியல் வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்படும்.

உள்ளாட்சித் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி 3,921 இடங்களைப் பெற்று 150க்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பெரும்பான்மையைப் பெற்றது. இருப்பினும், அவர்கள் சுமார் 100 அமைப்புகளில் மட்டுமே ஒட்டுமொத்த கட்டுப்பாட்டைப் பெற முடிந்தது. எதிர்க்கட்சியில், பிரதான பாராளுமன்ற எதிர்க்கட்சியான சமகி ஜன பலவேகய 1,766 இடங்களைப் பெற்றது. அதே நேரத்தில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனா 742 இடங்களைப் பெற்றது.

# உள்ளூராட்சி சபைகளில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் இணைந்து ஆட்சி அமைப்போம் - சுமந்திரன் தெரிவிப்பு!

தமிழ் கட்சிகளுடனும் இணைந்து ஏனைய உள்ளூராட்சி சபைகளில் இலங்கை தமிழரசு கட்சி ஆட்சியமைக்கும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பொன்றினை ஏற்பாடு செய்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் முடிவுகள் வெளிவந்துள்ளன. இலங்கை தமிழரசு கட்சி பெரும் வெற்றியினை ஈட்டியுள்ளது. பெரு வெற்றி என்பது இலங்கை தமிழரசு கட்சி வடக்கிலும் கிழக்கிலும் 58 சபைகளில் நாம் போட்டியிட்டு குறைந்தது 40 சபைகளை வடக்கு கிழக்கு தடவையறையில் இலங்கை தமிழரசு கட்சி கைப்பற்றியுள்ளது.

58 சபைகளில் 40 சபைகளை நாம் கைப்பற்றி இருந்தாலும் ஏனைய சபைகள் பெரும்பான்மை எஞ்சியுள்ளவை இனத்திற்குரிய சபைகளாகவும் காணப்படுகின்றது. மிக விசேடமான விடயம் இலங்கை தமிழரசு கட்சிக்கு பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று ஆறு மாத காலத்தினுள் அமோக வெற்றியினை யாழ்ப்பாண மக்கள் வழங்கி உள்ளார்கள். பாராளுமன்ற தேர்தலிலே ஒரு பிம்பம் உருவானது அதாவது 25வீத வாக்கினை மாத்திரம் பெற்றிருந்த தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பாராளுமன்ற தேர்தலுக்கான 6 ஆசனங்களில் மூன்று ஆசனங்களை பெற்றிருந்தது. சொற்பளவு வாக்கு விகிதத்தினை கொண்டு மக்கள் ஆணை தமக்கு வந்துவிட்டதாக தேசிய மக்கள் சக்தி தெரிவித்தது.

ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலே நாங்கள் பெரு வெற்றியினை ஈட்டியுள்ளோம். நாட்டிலே மாற்றம் ஏற்பட்டுவிட்டதாக கூறினார்கள். ஆனால் அந்த மாற்றம் மீண்டும் எம்மை நோக்கி வந்துள்ளது. இதற்குப் பிரதான காரணம் தமிழ் மக்கள் என்றும் தங்களுடைய அடையாளத்தை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். நாங்கள் சபைகளை அமைக்கின்ற பொழுது ஏனைய தமிழ் கட்சிகளுடனும் கலந்துரையாடி எவ்வாறு சபையின் ஆட்சியினை அமைப்பது என்பது தொடர்பில் தீவிரமாக கவனத்தினை செலுத்துவோம்.

இடம ்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் மூலம் பொதுமக்களுக்கு ஆற்றப்பட வேண்டிய சேவைகள் எங்களுடைய பிரதிநிதிகள் மூலம் அந்தந்த பிரதேசங்களில் ஆற்றப்படும். தெரிவு செய்யப்பட்ட எங்களுடைய கட்சியின் மக்கள் பிரதிநிதிகளுக்கு பயிற்சி பட்டறைகள் அரசியல் ரீதியான கருத்தமர்வுளை இலங்கை தமிழரசு கட்சி தொடர்ச்சியாக நடாத்த உள்ளது. நமது ஆட்சிக்குட்பட்ட



உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், நகர பிதாக்கள், மாநகர பிதாக்களுக்கு விசேட கருத்தமர்வுகளை முன்னெடுப்போம்.

இதேவேளை, நான் முன்னர் குறிப்பிட்ட விடயம் இந்த உள்ளூராட்சி சபை தேர்தலிலே ஒரு கட்சி தனியாக போட்டியிடுவதன் தார்பரியம் இப்பொழுது அனைவருக்கும் விளங்கி இருக்கும் என நான் நினைக்கின்றேன். கடந்த தேர்தலின் பொழுது இந்த முறைமையினை நாம் அறிமுகப்படுத்திய பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை உடைத்ததாக கூறினார்கள். மாறாக இன்று ஆசனங்கள் நாம் தனித்து கேட்ட பொழுதிலும் தமிழரசு கட்சி பலமாகவே எழுந்துள்ளது. இருந்த பொழுதிலும் ஏனைய கட்சிகளுக்கும் அதற்குரிய ஆசனங்கள் கிடைக்க பெற்றுள்ளன. இலங்கை தமிழரசு கட்சி பலவீனம் அடையவில்லை தமிழ் தேசியக் கூட்டமைப்பாக எங்களுடன் முதல் இணைந்து பயணித்த ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பாக தற்போது செயற்படுபவர்கள் அன்புடன் இணைகின்ற பொழுது பல இடங்களில் நாம் ஆட்சிகளை அமைக்கக்கூடியதாக இருக்கும் மேலும் வவுனியா மாவட்டத்தில் தமிழரசு கட்சியின் வாக்கு அங்குள்ள அரசியல் களம் குறித்து தீவிரமாக சிந்தித்து செயற்படுவோம் என்றார்.

# வடக்கு கிழக்கு மாகாணங்களில் நாங்கள் பின்னடையவில்லை



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி பின்னடையவில்லை. தமிழ் மக்கள் தேசிய அரசியலில் எம்முடன் கைகோர்த்ததை போன்று பிரதேசவாரியான அரசியலிலும் எம்முடன் ஒன்றிணைந்துள்ளார்கள் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை காரியாலயத்தில் 07 மே 2025 புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி பாரம்பரியமான அரசியல் கட்சிகளை காட்டிலும் ஒப்பீட்டளவில் வெற்றிப ்பெற்றுள்ளது. வடக்கு மாகாணத்தில் மாத்திரம் ஆளும் தரப்பு 150 உறுப்புரிமையை பெற்றுக்கொண்டுள்ளது.

மன்னார், வவுனியா , யாழ்ப்பாணம் ஆகிய தேர்தல் மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி சிறந்த முறையில் வெற்றிப் பெற்றுள்ளது. ஒருசில பகுதிகளில் பெரும்பான்மை பலத்தை ஆதரவை பெற்றுக்கொண்டுள்ளோம். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 81 உறுப்புரிமை கிடைக்கப் பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு பிரதேச சபை ஆசனம் கூட கிடைக்கப் பெறவில்லை. ஆகவே வடக்கு மாகாணத்தில் 150 உறுப்புரிமையை பெற்றுக் கொண்டமை வரலாற்று ரீதியிலான வெற்றியாகும். வடக்கு மாகாணத்தில் பாரம்பரியமான தமிழ் அரசியல் கட்சிகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

கிழக்கு மாகாணத்தில் பெரும்பாலும் தேசியத்தை முன்னிலைப்படுத்தி உருவாக்கப்பட்ட கட்சிகளே உள்ளன. இவ்வாறான நிலையிலும் தேசிய மக்கள் சக்தி அங்கும் வெற்றிப் பெற்றுள்ளது.

தேசிய அரசியலுக்கும், பிரதேச அரசியலுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேசிய அரசியலில் வெற்றிப் பெற்றதை போன்று, பிரதேச அரசியலிலும் நாங்கள் வெற்றிப் பெற்றுள்ளோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை முன்னிலைப்படுத்தி தேசிய மக்கள் சக்தி வகுத்த திட்டங்கள் இந்த பெறுபேற்றின் ஊடாக வலுப்படுத்தப்பட்டுள்ளன என்றார்.

### வடக்கில் ஆட்சியமைக்க ஆதரவைக் கோரும் தமிழ்க்கட்சிகள்

வடக்கில் உள்ள அரசியல் கட்சிகள் வடக்கில் ஆட்சியமைக்க தேசிய மக்கள் சக்தியிடம் (NPP) கோரிக்கை விடுத்துள்ளன என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். வடக்கில் உள்ள எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்திலும் எந்த அரசியல் கட்சிகளும் முழுமையான பெரும்பான்மையைப் பெறாததால் அந்த கட்சிகள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் தெரிவிக்கையில் வடக்கில் உள்ள பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் தேசிய மக்கள் சக்தி (NPP) இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. சில கட்சிகள் வடக்கில் ஆட்சி அமைக்க தங்கள் ஆதரவை வழங்கியுள்ளன என்றும் அவர் கூறினார்.

வடக்கில் தேசிய மக்கள் சக்தp( NPP) 150 இடங்களைப் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். பெரும்பான்மை இடங்களைப் பெற்ற கட்சிகள் கூட அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளன. கட்சியின் கொள்கையின்படி நாங்கள் அதைப் பற்றி முடிவு செய்வோம்' என்று அவர் மேலும் கூறினார்.

இதேவேளை வடக்கில் இலங்கை தமிழ் அரசு கட்சி பெரும்பான்மை இடங்களை பெற்றுள்ள போதிலும் ஆட்சி அமைப்பதற்கு சக தமிழ் கட்சிகளின் ஆதரவு தேவை என கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

## டக்ளசுடன் முரண்பட்டவர் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில்!

யாழ். ஊர்காவற்றுறையில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது தாக்குதல் மேற்கொள்ள முயன்றவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை, கரம்பன் பகுதியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது அந்தப் பகுதிக்குச் சென்ற முன்னாள் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் குழப்பம் விளைவிக்கும் வகையில் அவருடன் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

பலர் சமரசம் செய்ய முயன்ற போதும், அதனை ஏற்க மறுத்து, டக்ளஸ் தேவானந்தாவை நெருங்கித் தர்க்கத்தில் ஈடுபட்ட அவர், திடீரென டக்ளஸ் தேவானந்தா மீது தாக்க முற்பட்டார். இதனையடுத்துக் கூடியிருந்தவர்கள் அவரை அங்கிருந்து விரட்டினர்.

அந்தப் பகுதியில் பிரசார நடவடிக்கை நிறைவடைந்த பின்னர் அந்த நபரின் இல்லத்துக்கு வானில் சென்ற சிலர் அவரை நையப்புடைத்தனர். இதனால் படுகாயமடைந்த அவர் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

# சொந்த ஊரில் பலத்த அடி வாங்கிய ராஜபக்ஷ தரப்பு!

இலங்கை அரசியலில் தவிர்க்க முடியாத ஒரு விடயமாக ராஜபக்ச குடும்பத்தினரின் அரசியல் சாம்ராஜ்யம் கடந்த காலங்களில் மேலோங்கி காணப்பட்டது.

இந்த நிலையில், இந்த ஊழல் ஆட்சியை எப்போது வேறோடு அழிக்கலாம் என காத்து கொண்டிருந்த மக்களுக்கு பெரும் வாய்ப்பாக பொருளாதார நெருக்கடியை அடுத்து வந்த தேர்தல் அமைந்தது.

இதில் முற்றாக ராஜபக்ச குடும்பத்தினர் அடியோடு அளிக்கப்பட்டு ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்ட நிலையில் அது நாடாளுமன்ற தேர்தலிலும் தொடர்ந்தது. இதையடுத்து, விட்டால் தமது அரசியல் வாழ்க்கை முற்றாக அழிந்து விடும் என பயந்த ராஜபக்ச தரப்பு உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தம்மை நிலை நிறுத்துவதற்காக பல தரப்பட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதாவது, ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் என ஆட்சியை தம்வசப்படுத்திய தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் வெற்றி பெற அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தது. ஒப்பிட்டளவில் எல்லா இடத்திலும் தேசிய மக்கள் சக்திக்கான வாய்ப்பு காணப்பட்டதா என்பதும் சில மாவட்டங்களை பொறுத்த வரையில் கேள்விக்குறியாகத்தான் காணப்பட்டது.

காரணம், நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியை தேர்தெடுத்த தமிழ் மக்கள், நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ் காட்சிகளையே தேர்தெடுத்து இருந்தனர். இது தமிழ் மக்கள் தமிழ் கட்சிகளை தேர்தெடுப்படுத்து என்பது பாரம்பரிய விடயமாக காணப்பட்டமையினால் அநுரவிற்கு இது எதிர்பார்த்த விடயமாகவும் இருந்து இருக்கலாம்.

கடந்த ஆண்டு நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 88 வருடங்களுக்கு பின்னர் ராஜபக்ச குடும்பத்தினர்



அரசியலில் தமது பிரதிநிதித்துவத்தை இழந்திருந்தனர். இவ்வாறான பின்னணியில் தற்போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ உள்ளிட்ட ராஜபக்ஸக் களின் கோட்டையான மெதமுலன தேர்தல் தொகுதி, 2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்கவிடம் விழுந்துள்ளது.

வீரக்கெட்டிய பிரதேச சபைக்குரிய மெதமுலன தேர்தல் தொகுதியில் 1115 வாக்குகளை தேசிய மக்கள் சக்தி பெற்றுக் கொண்ட நிலையில் சிறிலங்கா பொதுஜன பெரமுன வெரும் 768 வாக்குகளை பெற்றுள்ளது. அரசியலை பொறுத்த மட்டில் மெதமுலன அதிகாரத்தை ராஜபக்ஸ குடும்பத்தினர் வைத்திருந்தனர்.

எனினும் தற்போது இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அந்த அதிகாரம் இல்லாமல் போய்விட்ட நிலையில் சொந்த இடத்திலேயே இது ஒரு பாரிய அடியாக அவர்களுக்கு அமைந்துள்ளது.

நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் என மக்கள் ராஜபக்ச ஆட்சியினை புறக்கணித்திருப்பது அவர்களது அரசியல் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

# தமிழரசுக்கட்சியிடம் யாழ்.மாவட்டத்தின் ஆதிக்கம்!




யாழ். மாவட்டத்திற்கான அனைத்து முடிவுகளும் வெளியாகியுள்ளன. இதற்கமைய, யாழ்ப்பாண மாநகர சபையை இலங்கை தமிழ் அரசுக் கட்சியும், வல்வெட்டித்துறை நகர சபையை இலங்கை தமிழ் அரசுக் கட்சியும், பருத்தித்துறை நகர சபையை அகில இலங்கை தமிழ் காங்கிரஸஜீம், காரைநகர் பிரதேச சபையை சுயேட்சைக் குழுவும், நெடுந்தீவு பிரதேச சபையை இலங்கை தமிழ் அரசுக் கட்சியும், வேலணை பிரதேச சபையை இலங்கை தமிழ் அரசுக் கட்சியும், வலிகாமம் மேற்கு பிரதேச சபையை இலங்கை தமிழ் அரசுக் கட்சியும், வலிகாமம் வடக்கு பிரதேச சபையை இலங்கை தமிழ் அரசுக் கட்சியும்,

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையை இலங்கை தமிழ் அரசுக் கட்சியும், வலிகாமம் தெற்கு பிரதேச சபையை இலங்கை தமிழ் அரசுக் கட்சியும், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையை இலங்கை தமிழ் அரசுக் கட்சியும், வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையை இலங்கை தமிழ் அரசுக் கட்சியும், பருத்தித்துறை பிரதேச சபையை இலங்கை தமிழ் அரசுக் கட்சியும், சாவகச்சேரி பிரதேச சபையை இலங்கை தமிழ் அரசுக் கட்சியும், சாவகச்சேரி நகர சபையை அகில இலங்கை தமிழ் காங்கிரஸஜீம், நல்லூர் பிரதேச சபையை இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சபையை ஈழ மக்கள் ஜனநாயக கட்சியும் கைப்பற்றியுள்ளன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி – 88,443 வாக்குகள் 135 உறுப்பினர்கள்

தேசிய மக்கள் சக்தி– 56,615 வாக்குகள் 81 உறுப்பினர்கள்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் – 51,046 வாக்குகள் 79 உறுப்பினர்கள்

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி – 35,647 வாக்குகள் 46 உறுப்பினர்கள்

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி 18,011 வாக்குகள் – 32 உறுப்பினர்கள்

தமிழ் மக்கள் கூட்டணி – 11,893 வாக்குகள் 15 உறுப்பினர்கள்

ஐக்கிய மக்கள் சக்தி – 4,103 வாக்குகள் 4 உறுப்பினர்கள்

சுயேட்சைக்குழு – 3,973 வாக்குகள் 6 உறுப்பினர்கள்

ஐக்கிய தேசிய கட்சி – 3,397 வாக்குகள் 5 உறுப்பினர்கள்

சுயேட்சைக்குழு – 2,402 வாக்குகள் 3 உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர்.

வெளியாகியுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பல தமிழ் கட்சிகள் வெற்றிப் பெற்று ஆசனங்களை கைப்பற்றியுள்ளன.

இதனடிப்படையில் யாழ்மாநகரசபையை ஆட்சியமைப்பது யார் என்ற கேள்வியெழும்பியுள்ளது. ஆட்சியமைப்பதற்கான அறுதிப் பெரும் பான்மையை யாரும் பெறவில்லை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி போனஸ் ஆசனங்கள் அடங்கலாக 12 ஆசனங்களை பெற்றுள்ளது, இலங்கை தமிழரசுக்கட்சி போனஸ் ஆசனங்கள் அடங்கலாக 13 ஆசனங்களை பெற்றுள்ளது. எனவே இந்த இரு கட்சிகளுமே அறுதிப் பெரும் பாண்மை பெறாத நிலையில் ஆட்சியமைப்பதானால் ஏனைய கட்சிகளுடன் கூட்டு சேர வேணடும்.

சுமந்திரனும், கஜேந்திரமகுமார் பொன்னம்பலமும் சேர்ந்து ஆட்சியமைப்பது அசாத்தியமானது எனப் பலரும் ஆருடம் கூறினாலும் அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை. நிரந்தர எதிரியும் இல்லை என்பதையும் மறுப்பதற்கில்லை.

# மனைவி சமைத்த பிரியாணி சுவையில்லையென யாழ்.மனைவியிடம் விவாகரத்துக் கோரும் டென்மார்க் தமிழர்



யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் சமீபத்தில் ஒரு விசித்திரமான விவாகரத்து மனு தாக்கல் செய்யப் பட்டது. அதாவது மனைவி சமைக்கும் பிரியாணி சுவையில்லாமல் இருப்பதால் டென்மார்க்கைச் சேர்ந்த 41 வயதான கணவன் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் உடுவில் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய மனைவி மீதே இவ்வாறு விவாகரத்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருமணத்திற்குப் பிறகு, மனைவி சமைக்கும் பிரியாணி சுவையாக இல்லாததால், கணவருக்கும் மனைவிக்கும் இடையில் அடிக்கடி வாக்குவாதங்கள் ஏற்பட்டுள்ளதாக விவாகரத்து மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதோடு பிரியாணி மீது தனக்கு தனித்துவமான ஆர்வம் உள்ளதாகவும், சமாதானமான வாழ்க்கையை தான் விரும்புவதால் தேவையற்ற மோதல்களை தவிர்ப்பதற்காக இந்த தீர்மானத்தை எடுத்ததாக டென்மார்க் கணவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் முழுமையாக விசாரித்து சட்டப்பூர்வமான விவாகரத்தை வழங்குமாறு டென்மார்க் கணவர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் இந்த விவாகரத்து வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

# மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுடன் கை கோர்க்க மாட்டோம்! சுயேட்சைகளை அரவணைப்போம் - ரில்வின் சில்வா தெரிவிப்பு!

மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சிகளுடன் தேசிய மக்கள் சக்தி கைகோர்த்து சபைகளை நிறுவாது என்று ஜே.வி.பி. பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார். ஆனால், தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து பணியாற்ற விரும்பும் தனி நபர்களின் சுயாதீன குழுக்கள் தொடர்பில் பரிசீலிக்க தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊழலற்ற அரசாங்கத்தை ஸ்தாபித்ததை போன்று ஊழலற்ற உள்ளூராட்சிமன்ற அதிகாரங்களையும் எம்மால் ஸ்தாபிக்க முடியும். ஒரு சில பகுதிகளில் பெரும்பான்மை பலம் கிடைக்கப் பெறாமைக்கான காரணத்தை ஆராய்ந்து குறைகளை நிவர்த்தி செய்து முன்னோக்கிச் செல்வோம்.

பெரும்பாலான உள்ளூராட்சிமன்றங்களில் தனித்து பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்போம். மக்களால் புறக்கணிக்கப்பட்ட தரப்பினருடன் கைகோர்த்து உள்ளூராட்சிமன்றங்களை ஸ்தாபிக்க போவதில்லை. தோல்வியடைந்துள்ள தரப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைத்து உள்ளூராட்சிமன்றங்களை ஸ்தாபிப்பது சிக்கலானதே.

ஒரு சில சுயேட்சைக்கு குழுக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைவதற்கு தயாராக இருக்குமாயின் அந்த தரப்பினரை ஒன்றிணைத்து



பெரும்பான்மை பலமற்ற உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளில் ஆட்சியமைக்கலாம். எவ்வாறாயினும் மாற்றுக் கொள்கை கொண்டுள்ள எதிர்தரப்பினருடன் ஒன்றிணை போவதில்லை.

தேசிய மக்கள் சக்தி மற்றும் அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் அதீத நம்பிக்கை கொண்டுள்ளார்கள். தேசிய மட்டத்தில் அதிகாரத்தை சிறந்த முறையில் செயற்படுத்துவதை போன்று பிரதேச மட்டத்திலான அரச நிர்வாகத்தையும் சிறந்த முறையில் செயற்படுத்துவோம் என்றார்.

# இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பான விடயங்கள் இரு தரப்பும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளது - ஜனாதிபதி அநுர தெரிவிப்பு!



இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒருசில விடயங்கள் இரு தரப்பு இணக்கப்பாட்டுக்கு எட்டப்பட்டுள்ளது. இந்தியாவுடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடி வெகுவிரையில் புரிந்துணர்வு ஒப்பந் தங்களை பாராளுமன்றத்துக்கு சமர்பி ப்பிபேன் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

தனியார் ஊடகத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்தியா வுடன் அண்மையில் கைச்சாத்திடப் பட்ட பாதுகாப்பு தொடர்பான புரிந் துணர்வு ஒப்பந்தம் குறித்து எழுப்ப ப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கை யில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது,

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் கிடையாது. வலுசக்தி துறையின் சுயாதீனத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் வலுசக்தி துறை அச்சுறுத்தலுக்குள் ளானால் தேசிய பாதுகாப்பு பலவீன மடையும்.

இலங்கைக்கு மின்சாரத்தை விநியோகி க்கும் பொறுப்பை அரசாங்கம் இந்தியா வுக்கு வழங்கியுள்ளதாக எதிர்க்கட்சி கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றது. மின்சாரத்துறை யின் சுயாதீனம் பற்றி தற்போது பேசு பவர்கள் தான் கடந்த ஆண்டு மின்சார சபையின் சுயாதீனத்தை அச்சுறுத்த லுக்குள்ளாக்கும் புதிய மின்சார சபை சட்டத்தை இயற்றினார்கள். இந்த சட்டத்தை வெகுவிரைவில் திருத்தம் செய்வோம்.

முப்படைகளின் எண்ணிக்கை குறை க்கப்படும். இதனை பகிரங்கமாகவே குறிப்பிடுகிறேன். இராணுவ படையின் எண்ணிக்கை 1 இலட்சமாகவும், கடற்படையின் எண்ணிக்கை 40 ஆயிரமாகவும், விமானபடையின் எண்ணிக்கை 18 ஆயிரமாகவும் வரை யறுக்கப்படும்.

முப்படைகளின் எண்ணிக்கையை குறைத்து பாதுகாப்பு துறைக்கு புதிய நவீன தொழில்நுட்ப சாதனங் கள் மற்றும் ஆயுதங்களை பெற்றுக் கொள்வதற்காகவே நிதி நெருக்கடிக்கு மத்தியில் இம்முறை பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு புரிந்துணர்பு ஒப்பந்தம் பற்றி மாறுப்பட்ட பல விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன. இராணுவ பயிற்சி, புலனாய்வு தகவல் பரிமாற்றம் உட்பட பொதுவான விடயங்கள் மாத்திரமே இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கையின் தேசிய பாதுகாப்பு குறித்த தீர்மானங்களை எடுக்கும் உரிமை இலங்கை அரசுக்கு உண்டு என்று இந்த புரிந்துணர்வு ஒப்பந்த த்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றச் சாட்டுக்களை முன்வைப்பவர்கள் இதனை அறியாமல் இருப்பது ஆச்சரியத்துக்குரியது.

பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏன் பகிரங்கப்படுத்தவில்லை என்று கேள்வியெழுப்பப்படுகிறது. பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத் தின் ஒருசில விடயங்கள் இருதரப்பு இணக்கப்பாட்டுக்கு எட்டப்பட்டுள் ளது. ஆகவே இந்தியாவுடன் இவ் விடயம் குறித்து கலந்துரையாடி அடுத்த வாரமல்ல வெகுவிரையில் இந்தியாவுடனான புரிந்துணர்வு ஒப்பந் தங்களை பாராளுமன்றத்துக்கு சமர் பிப்பிபேன்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அமைதியற்ற நிலை காண ப்படுகின்ற சூழலில் கொழும்புக்கு குண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என்றும் ஒரு சிலர் குறிப்பிடுகின்றனர். இவ்வாறானவர்களின் கருத்துக்கள் குறித்து அவதானம் செலுத்த போவ தில்லை. நாட்டின் தேசிய பாதுகாப்பை சகல துறைகளிலும் உறுதிப்படுத்தி யுள்ளோம் என்றார்.

இது இவ்றிருக்க பாகிஸ்தான் மீதான தாக்குதலுக்கு இந்தியாவிற்கு பயங்கர வாதத்தால் பாதிக்கப்பட்ட இஸ்ரேல் வெளிப்படையாகவே ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தியாவின் ஒபரேசன் சிந்தூருக்கு பல நாடுகளும் கவலை வெளியிட்டி ருக்கும் நிலையில், இஸ்ரேல் மாத்திரம் இந்தியாவின் தற்காப்பு உரிமையை ஆதரிப்பதாக கூறியுள்ளது.

அத்தோடு ஒபரேசன் சிந்தூர் போன்ற நடவடிக்கைகளின் மூலம், பயங்கர வாதிகள் அப்பாவிகளுக்கு எதிரான கொடூரமான குற்றங்களிலிருந்து ஒளிந்து கொள்ள இடமில்லை என் பதை அறிந்து கொள்ள வேண்டும் என இந்தியாவிற்கான இஸ்ரேலிய தூதர் ரூவன் அசார் தெரிவித்துள்ளார்.



# நிரந்தரமான அரசியல் தீர்வுக்கு மீண்டும் தமிழ் மக்கள் ஆணை!

## உள்ளூராட்சி தேர்தல் வெற்றி குறித்து மட்டுநகர் முதல்வர் சாணக்கியன்

நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வினை அடைய வேண்டுமென்ற எங்களுடைய இலக்கிற்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீண்டும் ஆணையை தந்திருக்கிறார்கள் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முடிசூடா மன்னனுமாகிய இரா.சாணக்கியன் தெரிவித்தார்.



மட்டக்களப்பில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் அலுவலகத்தில் 07 மே 2025 பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசு கட்சியானது வடக்கு கிழக்கிலே அமோகமான வெற்றியைப் பெற்றிருக்கிறது.

நாடு யாரிடமாவது இருக்கட்டும், தமிழர் தாயகம் தமிழரசோடு என்பது நாங்கள் தேர்தல் பரப்புரை காலத்தில் சொன்னதற்கமைய வடக்கு, கிழக்கிலே இருக்கின்ற மக்கள் எங்களுக்கு அமோகமான வெற்றியைத் தந்திருக்கின்றார்கள். இது உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வெற்றி என்பதைத் தாண்டி இது தமிழர்களுடைய எதிர் காலத்துக்கான ஆணையொன்றை தமிழ் மக்கள் தமிழ் அரசுக் கட்சியிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வினை அடைய வேண்டுமென்ற எங்களுடைய இலக்கிற்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீண்டும் ஆணையை தந்திருக்கிறார்கள்.

அந்த வகையில் விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென்று நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலிலும் வடக்கு, கிழக்கில் நாங்கள் கூடுதலான ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்க இருக்கிறோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாங்கள் போட்டியிட்ட பதினொரு சபைகளிலும் ஆசனங்களைப் பெற்றிருக்கின்றோம். பெரும்பான்மையாக தமிழர்கள் இருக்கின்ற அனைத்து பிரதேச சபைகளிலும் நாங்கள் பெரும்பான்மையான ஆசனங்களை வென்றிருக்கின்றோம். அனைத்து பிரதேச சபைகளிலும் ஆட்சியமைக்கக் கூடிய சூழல் இருக்கின்றது. அத்துடன் நாங்கள் சிறுபான்மையாக இருக்கின்ற இரண்டு பிரதேச சபைகளிலும் ஆசனங்களை பெற்றிருக்கின்றோம்.

இன்று மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து முதற் கட்டமாக பட்டியல் ஆசனங்கள், சபை அமைத்தல், யாருடன் இணைவது என்பது பற்றி கலந்துரையாடவுள்ளோம்.

நாங்கள் போட்டியிட்ட அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களையும் ஒவ்வொரு சபையாக அழைத்து, அந்த சபைகளில் பட்டியல் உறுப்பினர்கள் யார் என்றும் தவிசாளர், பிரதி தவிசாளர் பற்றி எவ்வாறு தீர்மானம் எடுப்பது என்பது பற்றியும் யாருடன் நாங்கள் இணைந்து ஆட்சியமைப்பது என்பது பற்றியும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கலந்துரையாடவுள்ளோம். எதிர்வரும் இரண்டு, மூன்று வாரங்களுக்குள் இலங்கை தமிழ் அரசுக் கட்சி அனைத்து சபைகளிலும் ஆட்சியமைக்கக் கூடிய ஒரு வியூகத்தை நாங்கள் அமைக்கவிருக்கிறோம் என்றார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் கூறுகையில்,

உள்ளூராட்சி சபைகளுக்கான பிரதிநித்துவ முறை என்பது சற்று சிக்கலான முறை என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படியான சிக்கலான ஒரு முறை காணப்பட்ட போதிலும் தமிழர்கள் அதிகமாக வாழ்கின்ற அனைத்து சபைகளிலும் நாங்கள் கணிசமான வாக்குகளைப் பெற்றிருக்கிறோம்.

வாக்குத்தொகை அடிப்படையில் நாங்கள் முதலாவதாக இருக்கின்றோம். சபைகளின் பிரதிநிதித்துவத்தை கைப்பற்றியிருப்பதன் அடிப்படையிலும் நாங்கள் முதலாவதாக இருக்கின்றோம். பிரதிநிதித்துவ முறையில் காணப்படுகின்ற சில குறைபாடுகள் காரணமாக நாங்கள் அதிகப்படியான வாக்குகள் பெற்றிருந்தாலும் தொங்கு நிலையான ஆசனங்கள் எனப் பலவாறான ஆசனங்கள் காணப்படுகின்றபடியால் அவற்றையெல்லாம் கடந்து ஒன்பது உள்ளூராட்சி சபைகளிலும் ஆட்சியமைக்கக் கூடிய அளவுக்கு எமது கட்சி உரிய ஆசனங்களை தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

எதிர்வரும் காலங்களில் சபைகளை அமைத்து சுமுகமான முறையில் அவற்றை கொண்டு செல்லக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்துவோம்.

சில கட்சிகள் கூட்டணியாகச் சேர்ந்து கடுமையான பிரயத்தனங்கள் செய்தும் கூட அவர்களுடைய முயற்சிகள் வெற்றி பெறவில்லை. தமிழர் தாயகம் தமிழ் அரசுக் கட்சியின் பக்கம் இருக்கிறது என்பதை இவ்விடத்தில் கூற முடியும். எதிர்காலத்தில் நாங்கள் சிறப்பான செயற்பாடுகளையும் முன்கொண்டு செல்வோம்.

தேசிய மக்கள் சக்தியானது தாங்கள் நடுநிலை வகிப்பதாக கூறியிருப்பதாக அறிய முடிகிறது. நாங்கள் தமிழ்த் தேசியம் சார்ந்து சிந்திப்பவர்களாக இருக்கின்றபடியால் தமிழ்த் தேசிய எண்ணத்தோடு இருப்பவர்களுக்குத்தான் முன்னுரிமை கொடுப்போம். மற்றையவர்கள் சிநேகபூர்வமாக எங்களுக்கு ஆதரவு தருவதற்கு முன்வருகின்றபோது பரஸ்பரம் நாங்கள் ஆதரவுகளை வழங்கி சபைகளை அமைக்கவேண்டிய தேவை இருக்கிறது.

நாங்கள் முதலாவதாக இருக்கின்றோம். ஏனென்றால், மட்டக்களப்பு பல்லினமும் வாழும் ஒரு பிரதேசமாக இருப்பதால் பரஸ்பரம் புரிந்துணர்வு, பரஸ்பர விட்டுக்கொடுப்பு என்பது தவிர்க்க முடியாத விடயமாக உள்ளது. அதனால், அவற்றை கையாளவேண்டிய தார்மீக பொறுப்பு எங்களிடம் இருக்கிறது எனத் தெரிவித்தார்.

## கேக் வெட்டித் தொண்டர்கள் கொண்டாட்டம்!



இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சி பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களை வெற்றிகொண்டதன் காரணமாக இரவு பட்டாசு கொழுத்திக் கொண்டாடியது. அத்துடன் வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டு அவர்கள் ஊர்வலமாகவும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாநகர சபை உட்பட பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கை தமிழ் அரசு கட்சி வெற்றிவாகை சூடியுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையின் 20 வட்டாரங்களில் 16 வட்டாரங்களை இலங்கை தமிழ் அரசு கட்சி கைப்பற்றிய நிலையில் வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையிலான மகிழ்ச்சிக் கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

மட்டக்களப்பு மாநகர சபையின் பல்வேறு வட்டாரங்களிலும் நேற்று மாலை வெற்றிக் கொண்டாட்டங்கள் நடைபெற்றதுடன் வேட்பாளர்களை மக்கள் கொண்டாடிய நிகழ்வும் நடைபெற்றது.

இதேபோன்று ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி வெற்றி பெற்றதை யடுத்து அங்கு ஆதரவாளர்கள் மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் போட்டியிட்டு அதி கூடிய வாக்குகளைப் பெற்ற இலங்கை தமிழ் அரசு கட்சியின் வேட்பாளரும் ஊடகவியலாளருமான செ.நிலாந்தனின் ஆதரவாளர்களினால் கட்சியின் சின்னத்தின் வடிவம் கொண்ட கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

இது இவ்வாறிருக்க வட மாகாண மக்களுக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படாமையினாலேயே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கம் வடக்கில் கடும் தோல்வி அடைந்துள்ளதாக வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் கண்டு பிடித்துள்ளார்.

பொய்யான வாக்குறுதிகளே வடக்கு மற்றும் கிழக்கில் அரசினால் வெற்றியை பெற முடியாமல் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இம்முறை அரசாங்கத்திற்கு இந்த மக்களின் ஆதரவு பெரிய அளவில் கிடைக்கவில்லை. வடக்கு கிழக்கு மக்கள், சிங்கள மக்களுடன் நல்ல உறவில் தான் உள்ளனர். எனினும் எங்களுக்கு என்று உரிமை உள்ளது. இதனால் தமிழ் மக்கள் என்ற ரீதியின் தமிழர்களின் இடத்தை நிர்வகிக்க எங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்பதனையே நாங்கள் கோருகின்றோம்.

தான் முதலமைச்சராக இருந்த காலத்தில் வட மாகாணத்திற்கு அரசாங்கத்தினால் மிகச் சிறிய தொகை ஒன்றே வழங்கப்பட்டது என்றார்.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

03 மே 2025 - 09 மே 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ் வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

### ஈழநாடு பரமேஸ் 416 841 9600


## 17வது ஆண்டு நினைவஞ்சலி



### சட்டத்தரணி சின்னத்தம்பி நாகராஜா

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்டிருந்த முன்னாள் யாழ்மாநகரசபை முதல்வர் சட்டத்தரணி சின்னத்தம்பி நாகராஜா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாள் 08 மே 2025 வியாழக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி, செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்தம்பி நாகராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு, பாரதி, செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகரெத்தினம் முருகேசு

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான் மேற்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகரெத்தினம் முருகேசு அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு நாள் 06 மே 2025 செவ்வாய்க்கிழமையாகும். கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாகரெத்தினம் முருகேசு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத் தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகம் இரத்தினவடிவேல்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், தும்பலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு நாள் 29 ஏப்ரல் 2025 செவ்வாய்க் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர் களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## சித்திரா பௌர்ணமி உபயம்



### திருமதி பாக்கியம் சின்னையா

புலோலி தெற்கு புலோலியைச் சேர்ந்த திருமதி பாக்கியம் சின்னையா அவர்களின் நினைவாக 11 மே 2025 சித்திரா பௌர்ணமி உபயமாக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பாக்கியம் சின்னையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 23வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி கங்காதரன்

மூளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கங்காதரன் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாள் 11 மே 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பரமேஸ்வரி கங்காதரன் நினைவு கூரந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நமசிவாயம் திருநாவுக்கரசு

புங்குடுதீவு இறுப்பிட்டி ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நமசிவாயம் தனபாலசிங்கம் அவர்களின் ஆறாவது ஆண்டு நினைவு நாள் 03 மே 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நமசிவாயம் திருநாவுக்கரவு அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




29 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஜெயச்சந்திரன் ஜெயஹீ தம்பதிகளின் செல்வப்புதல்வன் அர்யுன் ஜெயச்சந்திரனின் 5வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அர்யுன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




29 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், தும்பலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாக வும் கொண்டிருந்த திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




29 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களது 26வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




30 ஏப்ரல் 2025 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி கிருசாந்தி றொபின் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி கிருசாந்தி றெபின் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக்கு குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




30 ஏப்ரல் 2025 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி கிருசாந்தி றொபின் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி கிருசாந்தி றெபின் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக்கு குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




30 ஏப்ரல் 2025 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி கிருசாந்தி றொபின் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி கிருசாந்தி றெபின் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக்கு குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




01 மே 2025 வியாழக்கிழமை அளவெட்டியைச் சேர்ந்த ஜனா என்று அன்பாக அழைக்கப்படும் செல்வன் ஐங்கரன் யோகசுந்தரம் அவர்களது 36வதது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 மே 2025 வியாழக்கிழமை கனடாவில் வாழும் திருமதி இமயவல்லி விஸ்வலிங்கம் அவர்களது 80வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி இமயவல்லி விஸ்வலிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினர் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழநதைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்நதார்




03 மே 2025 சனிக்கிழமை புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நமசிவாயம் திருநாவுக்கரசு அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




04 மே 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி பரமேஸ்வரன் யசோதரா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி யசோதரா பரமேஸ்வரன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




06 மே 2025 திங்கட்கிழமை வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான் மேற்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகரெத்தினம் முருகேசு அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




08 மே 2025 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி மனோரஞ்சன் கிறிஸ்ரா தம்பதிகளின் செல்வப்புதல்வன் பிறிடன் மனோரஞ்சனின் 11வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் பிறிடன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




08 ம 2025 வியாழக்கிழமை யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.மாநகரசபை முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான திரு சின்னத்தம்பி நாகராஜா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




08 ம 2025 வியாழக்கிழமை யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.மாநகரசபை முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான திரு சின்னத்தம்பி நாகராஜா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




08 ம 2025 வியாழக்கிழமை யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.மாநகரசபை முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான திரு சின்னத்தம்பி நாகராஜா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்


ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி
LET LOVE BIND US ALL TOGETHER
இணைந்து வழங்கும்
19ம் ஆண்டு
சிவத்தமிழ் விழா
மே 10 சனிக்கிழமை
பகல் 2:30 மணிக்கு
அனுமதி இலவசம்
கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில்
733 Birchmount Road, Scarborough
பாடல்
காவடி
வேதபாராயணம்
பட்டிமன்றம்
கவிதை
நாடகம்
தேவாரம்
வழக்காடுமன்றம்
வில்லுப்பாட்டு
நடனம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி தமிழ், சமய, பண்ணிசை, வேதபாராயண ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும் முத்தமிழ் விழா
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி 416.291.7900, 647.336.3333 www.varasiththi.com
மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கும் இச் சிவத்தமிழ் விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.



கனகாம்பிகை
அடகுமாடம்
Pawn Bank Inc.
416.269.7198
2613 Eglington Ave East, Scarborough
416.269.7198
2613 Eglington Ave East, Scarborough


Fashion World Inc
Home of Toronto's Most Exclusive & Unique Kancheepuram Collection
Tel: 905 471 2223
www.thefashionworld.com


குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
THANA
416.728.5772
Thana Manickavasagar


Qualified Dentist in Your Neighborhood
SANDHURST
Creating Better Smiles Together
416-299-1020


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
1415 Kennedy Road, Unit 2 | Toronto, Ontario | M1P 2L6



அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மடம்
416.757.0034
416.994.3861
Kennedy & Eglington, Scarborough


ஸ்ரீரங்கனாஸ் நகைமாடம்
647.702.2159


TechSource
Computer & Electronics Liquidator
Etobicoke
647-352-2229
Scarborough
416.757.9111


Shop for Auto Parts
747 AUTOPARTS
Markham
905.471.4447
Scarborough
416.285.4447


Breakfast - Lunch - Dinner & More
DATTA FOOD
416-297-8402


MORTGAGE ARCHITECTS
THAYANANDA (DARSHAN) THURAIRAJAH
416.843.6279
darshan.thurair@mtgarc.ca


பூஜா ஸ்டோர்ஸ்
POOJA STORES
416-752-3112 416-738-1271


SHY ENTERPRISE
Retailer of Paper Products
Disposable Products
Cleaning Supplies
Foam Takeout Box,
Garbage Bags
Paper Towels
Toilet Papers,
Napkins
All kind of Plastic Bags
416.602.9714 - 905.205.0011


ERAA SUPER MARKET



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா

கலைமாமணி டாக்டர்

## நித்யஸ்ரீ மகாதேவன்

வழங்கும்

# சங்கீத சங்கமம் 2025





ஈழத் தமிழினத்தின்
செஞ்சொற்செல்வர்

## ஆறு திருமுருகன்

அவர்கள் வழங்கும் சிறப்புரை

# வேர்களைத் தேடுங்கள்



இந்நிகழ்வு மூலம் சேகரிக்கப்படும் நிதி **கனடா தமிழ் சமூக மையத்திற்கும்** ஈழத்தின் அறப்பணியாளர் - செஞ்சொற்செல்வர் **ஆறு திருமுருகனது சமூகப் பணிக்கும்** ஈழநாடு வாசகர்கள் சார்பில் வழங்கப்படும்.

**அன்பளிப்பு** VIP | $100 | $50

என் இனிய உறவுகளே! ஓர் உயர்வான நோக்கத்திற்காகவும் - கனடிய மண்ணில் எமது அடையாளத்துக்காகவும் தாயக மண்ணில் எமது இருப்பை உறுதி செய்யவும் நடாத்தப்படும் இந்நிகழ்வு தொடர்பான இத்தகவலை உங்கள் முகநூல் மூலமாகவும் தனிப்பட்ட முறையிலும் உங்கள் நண்பர்களுக்கும் பகிர்ந்து உங்கள் ஆதரவை வழங்குங்கள்.

**SUNDAY**
**JUNE 01 2025**
**@5:30PM**

**METROPOLITAN CENTRE**
**3840 FINCH AVE EAST**
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
**ஈழநாடு பரமேஸ்**
**416-841-9600**
eelanadu1993@gmail.com

***விழா 5.30 மணிக்கு ஆரம்பமாகும். 10.30 மணிக்கு நிறைவு பெறும். நேரடி ஒளி, ஒலி பரப்புக் கிடையாது.***

# உள்ளூராட்சி தேர்தல் 2025 - வடக்கு மாகாண முடிவுகள்

**தேர்தல் மாவட்டம் : யாழ்ப்பாணம்**

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 9,881 - 11 |
| தேசிய மக்கள் சக்தி | 7,908 - 9 |
| தமிழ்க் காங்கிரஸ் | 5,047 - 5 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 4,543 - 5 |
| சுயேச்சைக் குழு 01 | 1,910 - 2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,862 - 2 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கூட்டணி | 946 - 1 |
| சுயேச்சைக் குழு 02 | 531 - 1 |

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 6,896 -8 |
| தேசிய மக்கள் சக்தி | 5,424 - 6 |
| தமிழ்க் காங்கிரஸ் | 4,159-5 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 3,732-4 |
| சுயேச்சைக் குழு 01 | 1,910 - 2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,675 - 2 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கூட்டணி | 1,675-2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 917-1 |

## வேலனை பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 2,673-8 |
| தேசிய மக்கள் சக்தி | 1,840-4 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கூட்டணி | 1,313-3 |
| தமிழ்க் காங்கிரஸ் | 976-2 |
| சுயேச்சைக் குழு 01 | 492-1 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 450-1 |
| சுயேச்சைக் குழு 02 | 318-1 |
| ஐக்கிய தேசிய கட்சி | 314-1 |
| சுயேச்சைக் குழு 03 | 196-1 |

## காரைநகர் பிரதேச சபை

| | |
|---|---|
| சுயேச்சைக் குழு | 1350-2 |
| தேசிய மக்கள் சக்தி | 1044-2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 909-2 |
| தமிழ்க் காங்கிரஸ் | 833-2 |
| ஐக்கிய தேசிய கட்சி | 604-2 |
| தமிழரசுக் கட்சி | 442-1 |

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 7,233-11 |
| தமிழ்க் காங்கிரஸ் | 3,619-6 |
| தேசிய மக்கள் சக்தி | 5,675-9 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 2,261-3 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கூட்டணி | 1,655-3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,106-2 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 694-1 |

## பருத்திரை நகர சபை

| | |
|---|---|
| தமிழ்க் காங்கிரஸ் | |
| தமிழரசுக் கட்சி | 1,518 - 4 |
| தேசிய மக்கள் சக்தி | 736 - 2 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 665 - 2 |
| சுயேச்சைக் குழு | 335 - 1 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 213- 1 |

## சாவச்சேரி பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழ்க் காங்கிரஸ் | 6,938 - 8 |
| தமிழரசுக் கட்சி | 5,918-7 |
| தேசிய மக்கள் சக்தி | 5,234-5 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 4,310-5 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,414-1 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 650- 1 |

## யாழ்ப்பரணம் மாநகர சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 10,370-13 |
| தமிழ்க் காங்கிரஸ் | 9,124-12 |
| தேசிய மக்கள் சக்தி | 7,702-10 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 3,567-4 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 3,076-4 |
| ஐக்கிய தேசிய கட்சி | 587-1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 464-1 |

## சாவச்சேரி நகர சபை

| | |
|---|---|
| தமிழ்க் காங்கிரஸ் | 2,959-6 |
| தமிழரசுக் கட்சி | 2,594-6 |
| தேசிய மக்கள் சக்தி | 1,445-3 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 738-2 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 535-1 |

## வல்வெட்டித்துறை நகர சபை

| | |
|---|---|
| தமிழ்க் காங்கிரஸ் | 1,558-7 |
| தமிழரசுக் கட்சி | 1,299-5 |
| தேசிய மக்கள் சக்தி | 676-3 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 90-1 |

## நெடுந்தீவு பிரதே சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 974-6 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 752-4 |
| தேசிய மக்கள் சக்தி | 412-2 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 151-1 |

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 14 |
| தமிழ்க் காங்கிரஸ் | 3 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 1 |

## நெடுந்தீவு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழ்க் காங்கிரஸ் | 974-6 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 752-4 |
| தேசிய மக்கள் சக்தி | 412-2 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 158-1 |

## வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 6,995 - 13 |
| தமிழ்க் காங்கிரஸ் | 4,225-7 |
| தேசிய மக்கள் சக்தி | 3,329-6 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 2,512-4 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 1,165-2 |

## பருத்தித்துறை பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 7,490-9 |
| தேசிய மக்கள் சக்தி | 3,892-4 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 3,684-4 |
| சுயேச்சைக் குழு | 1,363-2 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 927-1 |

## நல்லூர் பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 5,576-7 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 4,921-6 |
| தேசிய மக்கள் சக்தி | 2,820-3 |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | 2,095-3 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 986-1 |

## ஊர்காவற்றுறை பிரதேச சபை

| | |
|---|---|
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 4 |
| தமிழ்க் காங்கிரஸ் | |
| தேசிய மக்கள் சக்தி | |
| தமிழரசுக் கட்சி | |
| ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி | |

## ஹாலிஎல விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 08

ஹாலிஎல - கெடவல வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.குறித்த வீதியில் பயணித்த ஓட்டோ வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த நபர் பதுளை வைத்தியசா லையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று உயிரிழந்துள் ளார்.

பதுளை ஹேகொட பகுதியைச் சேர்ந்த 69 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர் பான மேலதிக விசா ணைகளை ஹாலிஎல பொலிஸார் ஆரம்பித் துள்ளனர்.

(அ)

# மீன் சட்டிக்குள்ளேயே இருக்கட்டும் அடுப்புக்குள் விழக்கூடாது!

**இக்கட்டுரை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர் எழுதப்பட்டது என்பதை வாசகர்கள் கவனத்திற் கொள்க.**

மஉப்புக்குத் தட்டுப்பாடு. ஒரு கிலோ உப்பு பக்கெட் 300 ரூபாய்க்கு மேல் போகிறது. இத்தனைக்கும் இலங்கை




ஒரு தீவு.சுத்திவர உப்புக்கடல். ஆனால் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி சபை பிரச்சாரத்திற்கு அள்ளிக் கொட்டுவதற்கு தாராளமாக நிதி இருக்கிறது. தமிழ்ப் பகுதிகளில் பிரமாண்டமான கூட்டங்களை சிறீதரன் ஒருவரைத் தவிர தேசிய மக்கள் சக்திதான் ஒழுங்கு படுத்துகின்றது.

கிராமங்களிலும் நகரங்களிலும் அவர்கள் தமது இருப்பை காட்சிப்படுத்தும் விதத்தில் தமிழ்க் கட்சிகளிடம் இல்லாத ஓர் உத்தியைப் பயன்படுத்துகிறார்கள். பூட்டிக் கிடக்கும் ஒரு கடை அல்லது ஒரு மண்டபம் அல்லது ஒரு முழிப்பான இடம் போன்றவற்றில் கவிழ்த்து விடப்பட்ட பானா வடியில் ஒரு முகப்பை நிறுவுகிறார்கள். அல்லது தமது சுவரொட்டிகள் பதாகைகள் மூலம் அப்படியொரு வாசலை உருவாக்குகிறார்கள். அது தேசிய மக்கள் சக்தியின் வாசல் என்ற ஓர் உணர்வை மக்களுக்கு கொடுக்கும். அந்த முகப்பில் வாசலைத் தவிர ஏனைய எல்லாப் பரப்புகளையும் சுவரொட்டிகளால் நிரப்புகிறார்கள்.

தமிழ்க் கட்சிகள் இந்த அளவுக்குக் காசைக்கொட்டிப் பிரச்சாரம் செய்வதாகத் தெரியவில்லை. பெரிய கூட்டங்களை நடத்துவதற்குச் சத்தியற்றவைகளாக தமிழ்க் கட்சிகள் காணப்படுகின்றன.

குறுகிய கால இடைவெளிகளுக்குள் வந்த வருகின்ற மூன்று தேர்தல்களிலும் தமிழ்க் கட்சிகளிடம் பெரும் கூட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கு நிதி இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து நிதி பெயராவிட்டால் பெரிய கூட்டங்களை ஒழுங்குபடுத்த முடியாது என்றும் கூறப்படுகிறது.

இது தமிழரசியலின் அடிப்படைப் பலவீனம் ஒன்றைக் காட்டுகின்றது. எந்தவோர் அரசியல் நடவடிக்கைக்கும் நிதித் திட்டமிடல் வேண்டும். நிதியை எப்படிச் சேகரிப்பது? எவ்வளவு காலத்துக்குள் சேகரிப்பது? போன்றவை தொடர்பாக பொருத்தமான தரிசனங்கள் இருக்க வேண்டும். போதிய நிதி இருந்தால் தான் கட்சி நடத்தலாம்அ ரசியல் செய்யலாம்.முழு நேரச் செயற்பாட்டாளர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும். அரை நேரச் செயல்பாட்டாளர்களை வைத்துக் கொண்டு அரசியல் செய்ய முடியாது. அதுவும் இன அழிப்புக்கு எதிரான அரசியலைச் செய்ய முடியாது.

பச்சைத் தண்ணீரில் பலகாரம் சுட முடியாது. காற்றைக் குடித்துக் கொண்டு தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாது. தமிழ்க் கட்சிகளிடம் நிதிப் பற்றாக் குறை இருப்பதாகத் தெரிகிறது. புலம்பெயர்ந்த தமிழ் கோப்பரேட்கள் சிலர் கடந்த இரண்டு தேர்தல்களிலும் உதவியதாகக் கூறப்படுகிறது. ஆனால் நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் பெருங் கூட்டங்களை நடத்தக்கூடிய அளவு நிதி பெயரவில்லை என்று தெரிகிறது. ஒப்பீட்டு ரீதியாக தமிழ்க் கட்சிகளின் நிதி ரீதியான பலவீனங்களை பிரச்சாரக் களம் உணர்த்துகின்றது.

அதே சமயம் ஆளுங்கட்சியான என்பிபி அரச பலத்தோடும் வளத்தோடும் அதிகளவு நிதியைக் கொட்டி ஒரு பிரச்சாரப் போரை நடாத்துகின்றது.அரச பிரதானிகள் அந்தப் பிரச்சார மேடைகளில் தோன்றுகிறார்கள். குறிப்பாக அனுர கலந்து கொள்ளும் கூட்டங்களில் அவரோடு கைகளைக் குலுக்கி கொள்வதற்காக தமிழ் ஆண்களும் பெண்களும் முண்டியடிக்கிறார்கள். சில சமயங்களில் குழந்தைகளும் அனுரவோடு செல்ஃபி எடுப்பதற்கு அழுகிறார்கள்.

இது கைபேசிகளின் காலம். மனிதர்களிடம் இயல்பாக உள்ள தன்மோகமானது செல்ஃபி யுகத்தில் ஒரு நோயாக மாறி வருகிறது. அறிவிற்கும் மந்தமானதுக்கும் இடையிலான இடைவெளியானது யூரியுப்பர்களின் காலத்தில் மேலும் ஆழமானதாகி வருகிறது. பிரபல்யமானவரோடு படம் எடுப்பது் கைகுலுக்குவது்செல்ஃபி எடுப்பது் பின்னர் அதனை சமூக வலைத் தளங்களில் பரப்பி பெருமைப்பட்டுக் கொள்வது.

என்பிபி எந்தளவுக்கு டிஜிட்டல் ப்ரோமோஷனில் கவனமாக இருக்கிறது என்பதற்கு அண்மையில் நடந்த மே தின கூட்டத்தில் அனுர பேசும் போது, ''லங்கா தீப'' ஊடகவியலாளர் லஹிரு ஹர்ஷண எடுத்த ஒளிப்படம் தொடர்பான சர்ச்சை ஒரு சான்று. அந்த ஒளிப்படம் அனுரவை மக்கள் மத்தியில் நம்பிக்கையூட்டும் ஒரு தலைவராக முன் நிறுத்தவில்லை.

மாறாக எதையோ கண்டு மிரண்டு நம்பிக்கையிழந்து கையறு நிலையில் தன்னை காப்பாறுமாறு பிராத்தித்திக்கின்ற ஒருவராகத் தான் அந்த படம் அவரை முன்னிறுத்துகிறது. அந்தப் படத்தை வெளியில் வரவிடாமல் என்பிபிக்காரர்கள் தடுத்திருக்கிறார்கள். அதாவது அனுரவின் எந்தப் படம் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் என்பிபி கவனமாக இருக்கிறது.

தமிழ்ப் பகுதிகளிலும் அப்படித் தான். வல்வெட்டித்துறையில் அனுரவை அணைக்கும் மூதாட்டி கிட்டு பூங்காவில், வவுனியாவில் அனுரவை நோக்கிக் கை. குலுக்க அந்தரப்படும் ஆண்கள் பெண்கள் போன்ற படங்களும், காணொளிகளும் அனுரவை ஒரு கதாநாயகராகக் கட்டியெழுப்பும் நோக்க முடியவை.

அனுர எளிதாக அணுகப்படக் கூடிய, தொட்டுப் பழகக்கூடிய, எளிமையான ஒருவராகக் காணப்படுகிறார். எனவே அவரோடு கை குலுக்கிப் படம் எடுப்பதற்கு ஒரு பகுதி தமிழர்கள் ஆர்வமாகக் காணப்படுகிறார்கள்.

பாவம் தமிழ் அரசியல்வாதிகள். அவர்களோடு கைகுலுக்கவோ அல்லது செல்பி எடுக்கவோ ஆட்கள் இல்லை. அப்படி எடுத்துக் கொண்டாலும் அதை டிஜிட்டல் ரோமோஷன் செய்வதற்கு அவர்களிடம் காசு இல்லை.

எனினும் ஒரு விடயத்தில் தமிழ் கட்சிகள் ஒரே கூட்டில் நிற்கின்றன. என்பிபியை, அல்லது ஜேவிபியை அம்பலப்படுத்துவது, எதிர்த்துப் பிரச்சாரம் செய்வது என்ற ஒரு விடயத்தில் மட்டும் நான்கு தமிழ்த் தேசியத் தரப்புகளும் ஒரே கோட்டில் நிற்கின்றன. எனைய பெரும்பாலான விடயங்களில் தங்களுக்கு இடையே முட்டி மோதுகின்றன. அங்கே போட்டித் தவிர்ப்பிற்கான புரிந்துணர்வு இல்லை.

நாங்கள் தான் பெரிய கட்சி, மற்றவை உதிரிக் கட்சிகள் என்று கூறும் சுமந்திரன் நாங்கள் ஏனைய கட்சிகளை விமர்சிப்பதில்லை என்று முடிவெடுத்திருக்கிறோம் என்று கூறுகிறார். ஆனால் நடைமுறையில் உள்ளூரில் ஏனைய கட்சிகளுக்கு எதிராகத்தான் பிரச்சாரம் நடக்கின்றது.

ஏன் அதிகம் போவான்? தமிழரசுக் கட்சிக்குள்ளேயே கிளிநொச்சி மாவட்டத்தில் கட்சிக்குக் கிடைக்கும் வெற்றி மறைமுகமாக சுமந்திரனையும் பலப்படுத்தி விடுவோமா என்ற பயம் பல வேட்பாளர்களிடம் உண்டு. அண்மையில் ஒரு பெண் வேட்பாளர் அவ்வாறு கேட்டதாக சிறீதரன் ஒரு பிரச்சாரக் கூட்டத்தில் வைத்துக் கூறியுள்ளார்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சுமந்திரனின் எக்கிய ராஜ்யவை வைத்து

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**



அவரைத் தாக்குகிறது. தங்களுடையது மட்டும் தான் கொள்கைக் கூட்டு என்று கூறுகின்றது.

யாழ். மாநகர சபைக்கான தேர்தல் களத்தில் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட காரணத்தால் மணிவண்ணன் போட்டிக் களத்திலிருந்து அகற்றப்பட்டிருக்கிறார். ஒரு பிரதான போட்டியாளர் அவ்வாறு அகற்றப்பட்டிருப்பது ஏனைய கட்சிகளுக்கு அதிகம் வாய்ப்பானது.

அங்கே அரசாங்கத்தின் வேட்பாளராகக் களம் இறங்கியுள்ள யாழ். பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் நீக்கலான மேல்வாய்ப் பல்லோடு, குழந்தைத்தனமான முகத்தோடு காணப்படுகிறார். நகரத் திட்டமிடல் தொடர்பில் தனக்குள்ள பாண்டித்தியத்தை நிரூபிக்கும் அறிக்கைகளை விடுகிறார். மணிவண்ணன் இல்லாத போட்டிக் களம் தனக்குச் சாதகமானது என்று நம்பி என்பிபி உழைகின்றது. அர்ஜுனாவுக்கும் மூன்று என்பிபிக்காரர்களுக்கும் வாக்களித்த மக்கள் இனி யாருக்கெல்லாம் வாக்களிக்கப் போகிறார்களோ?

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் என்பிபிக்கும் அர்ஜுனாவுக்கும் கிடைத்த எதிர்பாராத வெற்றி என்பது தமிழ் ஐக்கியமின்மையினதும் தமிழ்த் தேசிய இயலாமைகளினதும் விளைவு. அந்த ஐக்கியமின்மை இப்பொழுதும் உண்டு. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் உருவாக்கப்பட்டிருக்கும் தமிழ்த் தேசியப் பேரவையானது ஒரு புதிய ஐக்கிய முயற்சி.ஆனால் அது தமிழரசுக் கட்சியைப் பிரதியீடு செய்யும் வளர்ச்சியை இன்னும் பெறவில்லை.

இப்பொழுதும் தமிழரசுக் கட்சிக்குத் தான் தாயக அளவில், ஒப்பீட்டளவில் அதிக வெற்றி வாய்ப்புக்கள் தெரிகின்றன. முன்னணி முன்னரை விட முன்னேறி வருகிறது. இப்படிப்பட்ட பலமுனைப் போட்டிக்குள் நான்கு தமிழ்த் தேசியத் தரப்புகளில் யார் வென்றாலும் அது தேசிய மக்கள் சக்திக்குத் தோல்விதான். அதேசமயம் எந்த ஒரு தமிழ்த் தேசியத் தரப்பு தோற்றாலும் அந்த வாக்குகள் ஏனைய மூன்று தமிழ்த்தேசியத் தரப்புகளுக்கு போகுமாக இருந்தால் அதுவும் பாதுகாப்பானதே. அப்பொழுது மீன் கரைந்தாலும் சட்டிக்குள் இருக்கும். மாறாக தமிழ்த் தேசியப் தரப்பிலிருந்து என்பிபிக்குத் திரும்பும் வாக்கு ஒவ்வொன்றும் சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழும் வாக்குத் தான்.



# உள்ளூராட்சி தேர்தல் 2025 - கிழக்கு மாகாண முடிவுகள்

## தேர்தல் மாவட்டம் : திருகோணமலை

### கிண்ணியா நகர சபை

| | |
|---|---|
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 04 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 04 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 03 |
| தேசிய மக்கள் சக்தி | 02 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 01 |
| மக்கள் கூட்டணி | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **29,131** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **20,911** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **178** |

### திருகோணமலை மாநகர சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 09 |
| தேசிய மக்கள் சக்தி | 06 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 04 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 03 |
| ஐக்கிய தேசிய கட்சி | 01 |
| சுயேச்சை குழு(01) | 01 |
| சுயேச்சை குழு (02) | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **38,338** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **23,827** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **406** |

### திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 06 |
| தேசிய மக்கள் சக்தி | 04 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 03 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 01 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 02 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 01 |
| சுயேச்சை குழு (01) | 01 |
| சுயேச்சை குழு (05) | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **35,617** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **22,468** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **498** |

### சேருவில பிரதேச சபை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 07 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 03 |
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 01 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 01 |
| சர்வஜன அதிகாரம் | 01 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் (01) | 01 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன (05) | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **11, 859** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **8,125** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **90** |

### மூதூர் பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 05 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 04 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 03 |
| தேசிய மக்கள் சக்தி | 03 |
| பதியப்பட்ட வாக்குகள் | **50,024** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **35,352** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **328** |

## தேர்தல் மாவட்டம் : மட்டக்களப்பு

### கோரளைப்பற்று பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 10 |
| தேசிய மக்கள் சக்தி | 04 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி | 04 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 04 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 03 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **58,318** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **34,850** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **295** |

### கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி | 08 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 06 |
| தேசிய மக்கள் சக்தி | 02 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 01 |
| ஐக்கிய தேசிய கட்சி | 01 |
| சுயேச்சை குழு | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **24,659** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **15,622** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **132** |

### மண்முனை மேற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 10 |
| தேசிய மக்கள் சக்தி | 03 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி | 03 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 01 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 01 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **25,723** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **16,185** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **292** |

### மட்டக்களப்பு மாநகர சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 11,102 |
| தேசிய மக்கள் சக்தி | 5,860 |
| சுயேச்சை குழு | 5,325 |

### மட்டக்களப்பு - காத்தான்குடி மாநகர சபை

| | |
|---|---|
| முஸ்லிம் காங்கிரஸ் | 18,642 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 11,062 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி | 5,135 |

### மட்டக்களப்பு - ஏறாவூர் பிரதேச சபை

| | |
|---|---|
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 6,453 |
| ஐக்கிய தேசிய கட்சி | 3,538 |
| தேசிய மக்கள் சக்தி | 1,127 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,231 |

### போரதீவுப்பற்று பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 10,288 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 6,009 |
| தேசிய மக்கள் சக்தி | 3,404 |

## தேர்தல் மாவட்டம் : அம்பாறை

### அக்கரைப்பற்று மாநகர சபை

| | |
|---|---|
| தேசிய காங்கிரஸ் | 11 |
| தேசிய மக்கள் சக்தி | 04 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 03 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 02 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 01 |
| சுயேச்சை | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **27,760** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **18,192** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **114** |

### திருக்கோவில் பிரதேச சபை

| | |
|---|---|
| சுயேச்சை குழு (01) | 08 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 06 |
| தேசிய மக்கள் சக்தி | 01 |
| சுயேச்சை குழு (02) | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **22,926** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **15,747** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **168** |

### நிந்தவூர் பிரதேச சபை

| | |
|---|---|
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 06 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 04 |
| தேசிய மக்கள் சக்தி | 02 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **22,944** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **16,439** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **126** |

### லகுகல பிரதேச சபை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 08 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 07 |
| சிறீ லங்கா பொதுஜன பெரமுன | 03 |
| பதியப்பட்ட வாக்குகள் | **8,018** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **6,355** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **61** |

### காரைதீவு பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 04 |
| தேசிய மக்கள் சக்தி | 03 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 02 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 01 |
| சுயேச்சை குழு | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **14,624** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **9,965** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **55** |

### நாவிதன்வெளி பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 05 |
| சுயேட்சை குழு (01) | 02 |
| சுயேட்சை குழு (04) | 02 |
| சுயேட்சை குழு (03) | 01 |
| தேசிய மக்கள் சக்தி | 01 |
| சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 01 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 01 |
| பதியப்பட்ட வாக்குகள் | **17,485** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **12,296** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **118** |

# வாக்குறுதிகளை நிறைவேற்றும் விடயத்தில் பயங்கரவாதத் தடைச் சட்ட ஒழிப்பு அரசுக்கு சிறந்த ஒரு பரீட்சை!

குழப்பகரமான இலங்கையின் வரலாற்றில் பல வன்முறைச் சுழற்சிகளில் `பயங்கரம்` என்பது இடையறாத பேசுபொருளாக இருந்து வருகிறது. திரும்பத் திரும்ப பெரும்பான்மையின வாதப் போக்கு ஒன்றை வெளிக்காட்டி வந்திருக்கும் அரசு தன்னால் குடிமக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்களை ஏற்றுக்கொண்டு ஒரு போதுமே சுய பரிசோதனையைச் செய்ததில்லை என்கிற அதேவேளை அது `பயங்கரம்` என்று தான் கருதுகின்ற எதையும் `எதிர்ப்பதற்கு` அல்லது `நசுக்குவதற்கு` கொடூரமான வழிமுறைகளை பயன்படுத்துவதை பெரும்பாலும் நியாயப்படுத்தியே வந்திருக்கிறது.

இது விடயத்தில் இலங்கையில் தொடர்ச்சியாக கவனத்தைப் பெற்றிருக்கும் ஒரு சட்டம் என்றால் அது ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் ஆட்சிக்காலத்தில் 1979ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டமேயாகும் (Prevention of Terrorism Act). அந்த சட்டம் தென்னாபிரிக்காவில் வெள்ளையரின் இன ஒதுக்கல் ஆட்சிக்காலத்தின் சட்டம் மற்றும் ஐரிஷ் தீவிரவாதத்துக்கு எதிரான பிரிட்டிஷ் சட்டங்களின் பாணியில் அமைந்ததுடன் 1978ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் அதேபோன்ற வேறு இயக்கங்களையும் தடைசெய்வதற்காக கொண்டு வரப்பட்ட இன்னொரு சட்டத்தை பதிலீடு செய்தது.

அதன் நோக்கம் தெளிவானது. இலங்கைத் தீவில் தனித்தமிழ் நாடு ஒன்றை உருவாக்குவதில் நாட்டம் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஏனைய இயக்கங்களையும் ஒழிப்பதேயாகும். பயங்கரவாத தடைச்சட்டம் ஆரம்பத்தில் மூன்று வருட காலத்துக்கான ஒரு தற்காலிக ஏற்பாடாகவே கொண்டு வரப்பட்டது. பிறகு 1982ஆம் ஆண்டில் இலங்கையின் சட்டப் புத்தகத்தில் நிரந்தரமானதாக பொறிக்கப்பட்டு விட்டது.

### தண்டனையின்மையுடன் துஷ்பிரயோகம்

இந்த சட்டத்தில் நீதித்துறையின் மேற்பார்வையின்றி ஆட்களை நீண்ட காலத்துக்கு (Administrative detention) தடுப்புக்காவலில் வைப்பதற்கும் பொலிஸாருக்கு அளிக்கின்ற ஒப்புதல் வாக்குமூலங்களை சாட்சியங்களாக ஏற்றுக் கொள்வதற்கும் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கத் தவறுவதை ஒரு குற்றமாக்குவதற்கும் ஏற்பாடுகள் இருக்கின்றன. வெளிப்படையான தண்டனையின்மையுடன் (Impunity) இந்த ஏற்பாடுகள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன என்பதை சொல்லித் தான் எவரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று இல்லை.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான வழக்கு ஒன்றில், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் பொய்யான அல்லது புனைந்து கட்டப்பட்ட சாட்சியங்களை சமர்ப்பித்திருப்பதாக நிரூபிக்கப்பட்டால் கூட அவர்கள் எந்தவிதமான விளைவுக்கும் முகங் கொடுக்கத் தேவையில்லாத அளவுக்கு இந்த தண்டனையின்மை இருக்கிறது. வழக்குகள் தோல்வியடைகின்றன. ஆனால், சாட்சியங்களை புனைந்து கட்டிய அல்லது அதையும் விட மோசமாக, சித்திரவதையைச் செய்து ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற்ற பொலிஸ் அதிகாரிகள் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் சுதந்திரமாகத் திரிகிறார்கள்.

இந்த சட்டத்தின் இன்னொரு விளைவு ஓயாது தொல்லை தரும் ஒரு பாதுகாப்பு அனர்த்தமாகும். `பயங்கரவாத குற்றங்களை தீர்த்துக் கொள்வதற்கு'' சுலபமான வழியொன்றை பொலிஸ் அதிகாரிகள் கண்ட போது அவர்கள் உண்மையான குற்றவாளியை கண்டறிய விசாரணையை நடத்தவில்லை. அந்த குற்றச் செயலில் உண்மையில் சம்பந்தப்படாதவர்களிடம் இருந்து கூட ஒப்புதல் வாக்குமூலங்கள் பெறப்பட்டன. உண்மையான குற்றவாளி வெளியில் இருந்த அதேவேளை அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலங்களை கொடுத்தவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டார்கள்.

பொலிஸாருக்கு `தகவல் கொடுக்கவில்லை` என்பதற்காக பல அப்பாவிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்ட பல




வழக்குகளை நாம் கண்டிருக்கிறோம். அவர்களிடம் இருந்து பலவந்தமாக பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றே போதும். அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும்.

உரிமைகளை பாதுகாப்பதற்காக போராடுகின்ற செயற்பாட்டாளர்கள் பல தசாப்தங்களாக பயங்கரவாத தடைச்சட்டத்தை கடுமையாக எதிர்த்துக் குரல்கொடுத்து வருகிறார்கள். நாட்டின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பாரதூரமான அச்சுறுத்தலாக அமையும் குற்றச்செயல்களை கையாளுவதற்கு சாதாரண சட்டத்தில் ஏற்பாடுகள் இருக்கின்றன என்பதை சட்டத்தரணிகள் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்திருக்கிறார்கள். பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பாகவும் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக சுதந்திரங்கள் மீதான அதன் தாக்கங்கள் தொடர்பாகவும் ஜனநாயகத்தை மதிக்கும் பல நாடுகள் விசனத்தை வெளிக்காட்டியிருக்கின்றன. உறுதியளித்ததன் பிரகாரம் பயங்கரவாத தடைச் சட்டத்தை இலங்கை இரத்துச் செய்யாததை காரணம் காட்டி ஐரோப்பிய ஒன்றியம் அதன் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை 2010ஆம் ஆண்டில் இடைநிறுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக உலகின் வேறு நாடுகளிலும் கொடூரமான சட்டங்கள் பயன்படுத்தப்படுவதில் ஒரு பொதுவான அம்சத்தை அவதானிக்க முடியும். இலங்கையின் பயங்கரவாத தடைச் சட்டமும் அரசாங்கத்தின் எதிரிகள், அதிருப்தியாளர்கள் மற்றும் சிறுபான்மை இனக்குழுக்களுக்கு எதிரான தெரிந்தெடுத்த முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பல மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் ஊடகவியலாளர்களும் இலக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். போரின் போது தமிழ் மக்களை அரசாங்கம் பட்டினிபோட்டதாக குற்றஞ்சாட்டி பிரபல்யமான பத்திரிகையாளரான ஜே.எஸ். திஸ்ஸநாயகம் பெரிதாக அறியப்படாத சஞ்சிகை ஒன்றில் கட்டுரை ஒன்றை எழுதியதற்காக அவருக்கு 2009ஆம் ஆண்டில் 20 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (கடுமையான சர்வதேச நெருக்குதல்களை தொடர்ந்து அவர் மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலையானார்) திஸ்ஸநாயகத்தின் கட்டுரை இனங்களுக்கு இடையில் அமைதியின்மையை ஏற்படுத்தக் கூடியது என்பதே அவருக்கு எதிரான குற்றச்சாட்டாகும்.

### சிறிய திருத்தங்களுடன் தொடருகிறது

கொழும்பில் அடுத்தடுத்து பதவியில் இருந்த அரசாங்கங்கள், குறைந்த பட்சம் 2009ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்த பின்னராவது, பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்வதாக உறுதியளித்தன. ஆனால், சில மேலோட்டமான திருத்தங்களுடன் அந்த சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் பயன்பாடு மீது இடைக்கால நிறுத்தம் ஒன்று அறிவிக்கப்பட்டது. ஆனால், ஒரு சில வாரங்களுக்குள்ளாகவே அதன் கீழ் கைதுகள் இடம்பெற்றன.

இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் ஆளும் தேசிய மக்கள் சக்தி அதன் தேர்தல் பிரசாரங்களின் போதும் அதிகாரத்துக்கு வந்த பின்னரும் பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதாக திரும்பத் திரும்ப உறுதியளித்தது. தேசிய மக்கள் சக்தியின் பிரதான அங்கத்துவக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) அதன் இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சிக் காலத்தில் (1987 – 1990) பயங்கரவாத தடைச்சட்டத்தினால் பெருமளவுக்கு பாதிக்கப்பட்ட காரணத்தால், அந்த சட்டத்தை இரத்துச் செய்வது என்ற அதன் உறுதிமொழி பெரும்பாலும் நிறைவேற்றப்படும் என்று நம்பப்பட்டது.

தமிழ்ப் போராளிகளை ஒடுக்குவதற்காக முதலில் அந்த சட்டம் கொண்டு வரப்பட்ட போதிலும், சிங்களவர்களுக்கு எதிராகவும் குறிப்பாக, ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கு எதிராக அதைப் பயன்படுத்துவதற்கு அரசு தயக்கம் காட்டவில்லை. மிகவும் அண்மைக்காலத்தில் 2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு முஸ்லிம்களை இலக்கு வைக்கவும் அது பயன்படுத்தப்பட்டது.

### இரத்துச் செய்யக் கோரும் இயக்கம்

2021ஆம் ஆண்டில் இந்த கட்டுரையாளர் பாராளுமன்றத்தில் உள்ள சகாக்களுடனும் உரிமைகள் செயற்பாட்டாளர்களுடனும் சேர்ந்து பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடு தழுவியதாக கையெழுத்து இயக்கம் ஒன்றை முன்னெடுத்தார். அந்த கோரிக்கைக்கு சகல இனத்துவ சமூகங்களிடம் இருந்தும் மக்களின் பேராதரவு கிடைத்தது பெரும் நம்பிக்கையை தந்தது. அந்த இயக்கத்தில் சகல மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் கூட ஆர்வத்துடன் பங்கேற்றனர். என்றாலும், அந்த சடடத்தை இரத்துச் செய்கின்ற பொறுப்பு அதன் கைகளில் வந்து வீழ்ந்தபோது தேசிய மக்கள் சக்தியும் தயக்கம் காட்டுவதைப் போன்றே தெரிகிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீண்டகாலமாக (துஷ்) பிரயோகம் செய்து பழக்கப்பட்டு விட்ட பாதுகாப்புத் துறை அதை கைவிடுவதற்கு விரும்பாமல் இருப்பது அதற்கு பெரும்பாலும் காரணமாக இருக்கலாம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டதற்கு புறம்பாக, அது விடயத்தில் முக்கியமான எந்தவொரு நடவடிக்கையையும் அரசாங்கம் இன்னமும் எடுக்கவில்லை.

பயங்கரவாத தடைச்சட்டம் முற்றுமுழுதாக இரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அதை இன்னொரு `மனிதாபிமானம் வாய்ந்த சட்டத்தினால்` பதிலீடு செய்வது தொடர்பான எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் பங்கேற்பதற்கு, எதிர்க்கட்சியில் இருந்தபோது தேசிய மக்கள் சக்தி உறுதியாக மறுத்தது. ஆனால், இப்போது அதிகாரத்தில் இருந்துகொண்டு அது பயங்கரவாத தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதற்கு வரையப்பட வேண்டிய இன்னொரு சட்டம் குறித்து பேசுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அந்த பதிலீட்டுக்காக அடுத்தடுத்து முன்னைய இரு அரசாங்கங்களினால் இரு வரைவுகள் முன் வைக்கப்பட்டன. ஆனால், அந்த இரு வரைவுகளும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களின் மிகவும் கடுமையான கண்டனங்களுக்கு உள்ளாகின. அந்த வரைவுகள் உண்மையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை விடவும் மோசமானவையாக இருந்ததாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

எந்தவிதமான சந்தேகத்துக்கும் இடமின்றி இல்லாமல் செய்யப்பட வேண்டிய பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதாக வழங்கிய அதன் சொந்த வாக்குறுதி விடயத்தில் தேசிய மக்கள் சக்தி எவ்வாறு நகர்வுகளை முன்னெடுக்கிறது என்பதை நாம் அவதானித்துக் கொண்டிருக்கிறோம்.

தேர்தல் காலத்தில் மக்களுக்கு அள்ளி வீசிய வாக்குறுதிகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்துமா, இல்லையா என்பதை பார்ப்பதற்கு பயங்கரவாத தடைச்சட்ட இரத்து விவகாரம் ஒரு சிறந்த பரீட்சையாக இருக்க முடியும்.

(தி இந்து, 30, ஏப்ரல் 2025)

# மன்னாரில் காற்றலைத் திட்டமா? கனிம மணல் திட்டமா? மக்களின் குற்றச்சாட்டுக்கு அதானி நிறுவனம் விளக்கம்!

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள போதிலும், மன்னார் தீவுப் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மற்றும் ஸ்தாபிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்கள் குறித்து தொடர்ந்து சர்ச்சை நிலவி வருகின்றது.

இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான 30 காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் சில காற்றாலை கோபுரங்கள் தற்போது ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் இந்தியாவின் அதானி நிறுவனம் மன்னார் பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த சூழ்நிலையில், அந்த திட்டத்திலிருந்து தாம் வெளியேறுவதாக அண்மையில் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் இலங்கை மின்சார சபை மாத்திரமன்றி இலங்கையின் மற்றும் சில தனியார் நிறுவனங்களும் இந்த காற்றாலை திட்டத்தை முன்னெடுப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகின்றன.

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் முன்னெடுக்கப்படுவதற்கு அந்தப் பிரதேச மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர். மன்னார் காற்றாலை திட்டத்தின் தற்போதைய நிலைமை குறித்து பிபிசி தமிழ், அந்தப் பிரதேசத்திற்கு சென்று கள ஆய்வு மேற்கொண்டது.

இலங்கையின் புவியியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக மன்னார் தீவு பகுதி அமையப் பெற்றுள்ளது. இலங்கையின் நிலப் பரப்பிலிருந்து மன்னார் பிரிந்து காணப்படுகின்ற நிலையில், மன்னாரையும், இலங்கை நிலப் பரப்பையும் ஒன்றிணைக்கும் வகையில் பாலமொன்று அமைக்கப்பட்டு, இலங்கை பிரதான நிலப் பரப்புடன் மன்னார் தீவுப் பகுதி இணைக்கப்பட்டுள்ளது.



மன்னார் 30 கிலோமீட்டர் நிளத்தையும், 4.5 கிலோமீட்டர் அகலத்தையும் கொண்ட சுமார் 130 சதுர கிலோமீட்டர் அளவைக் கொண்டமைந்த ஒரு பிரதேசமாகும். மன்னார் மாவட்டத்தின் அதிகபட்ச உயரமாக 21 அடி காணப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தின் 30 வீதமான பகுதிகள் கடல் மட்டத்திலிருந்து குறைவான மட்டத்திலேயே காணப்படுவதாக சூழலியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதை விடுத்து மன்னாரின் சில பகுதிகள் மாத்திரமே கடல் மட்டத்திலிருந்து உயரமாக காணப்படுகின்ற நிலையில், அந்த பகுதிகளில் அதிகூடிய உயரமானது 7 மீட்டர் எனக் கூறப்படுகின்றது.

அதேபோன்று மன்னார் நிலப் பரப்பில் அதிகளவிலான கனிம வளங்கள் காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இல்மனைட் கனிம வளம் மன்னார் நிலப் பரப்பில் அதிகளவில் காணப்படுகின்றன. இல்மனைட்டை தவிர்த்து. மேலும் பல்வேறு வகையான கனிம வளங்கள் காணப்படுவதாக ஆய்வுகளின் ஊடாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நிலப் பரப்பில் சுமார் 6000 முதல் 8000 ஆண்டுகளுக்கு முன்னரான காலத்திலிருந்து இந்த கனிம வளங்கள் உருவாகியுள்ளதாக மன்னார் கனிம வளங்கள் தொடர்பில் ஆய்வுகளை நடத்திய ஆவுஸ்திரேலிய நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், இலங்கைக்கு வருடாந்தம் லட்சக்கணக்கான வெளிநாட்டு சுற்றுலாப் பறவைகள் வருகைத் தருகின்ற சூழ்நிலையில், அந்த பறவைகளின் பிரதான நுழைவாயிலாக மன்னார் பகுதி காணப்படுகின்றது. இவ்வாறு இலங்கைக்கு வருகைத் தருகின்ற வெளிநாட்டு சுற்றுலாப் பறவைகள், இலங்கையில் முட்டை இட்டு குஞ்சு பொறிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து, மீண்டும் குஞ்சுகளை இலங்கையிலிருந்து தமது நாட்டிற்கு அழைத்து செல்வதாக சூழலியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

கடலால் சூழப்பட்ட இயற்கை வளங்கள் உள்ளிட்ட பல்வேறு சுற்றுலா தலங்களை மன்னார் மாவட்டம் கொண்டுள்ளது.

மன்னாரில் வலுசக்தி அமைச்சின் கீழ் 30 காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்கள் 2020ம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் 200 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் நிதித் திட்டத்தின் கீழ் இந்த திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த திட்டத்தின் ஊடாக ஆண்டொன்றிற்கு 400 மெகா வோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறித்த திட்டத்தை மேலும் வலுப்படு த்தும் வகையில் மேலும் சில காற் றாலை மின் உற்பத்தி கோபுரங்களை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

வலுசக்தி அமைச்சுக்கு மேலதிகமாக அதானி நிறுவனமும் மன்னார் பகுதியில் காற்றாலை மின் உற்பத்தியை மேற்கொள்ள முயற்சித்த போதிலும், தற்போது அந்த முயற்சி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், காற்றாலை மின்சார உற்பத்தி கோபுரங்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேலும் சில நிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

### மன்னார் காற்றாலை திட்டத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் - மக்கள் குற்றஞ் சுமத்துவது என்ன?

மன்னார் காற்றாலை மின்சார உற்பத்தி கோபுரங்களினால் தமது வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர்.



இந்தப் பகுதியின் இயற்கை வளங்கள் அழித்துக்கப்படுவதாகக் கூறுகிறார் தாழ்வுபாடு மீனவ கிராமிய அமைப்பின் செயலாளர் ரெனி வாஸ் மேலும் அவர், "ஒரு காற்றாலை அமைப்பதற்கு 3000 பக்கெட் மண்ணை அகழ்கின்றனர். இவ்வாறு தோண்டி எடுக்கின்ற மண்ணை வெளி இடங்களுக்கு கொண்டு போகின்றார்கள். இரண்டாவது குடியிருப்பு பாதிக்கப்படுகின்றது. தாழ்வுபாடு கிராமத்தில் 30 காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. புதிதாக மூன்று காற்றாடிகள் அமைப்பதாக சொல்லியிருக்கின்றார்கள்'.

இந்த மூன்று காற்றாடிகளும் குடியிருப்பிற்கு அண்மித்த பகுதிகளில் இருக்கின்றது. அதனால் எங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. காற்றாடி இங்கிருந்து அமைக்கப்பட்டுள்ளதுடன், இங்கிருந்து வயர் கொண்டு போவதாக சொல்லியிருக்கின்றார்கள். இந்த வயர் புதைப்பதற்கு நிலத்தில் 25 அடி தோண்டி அந்த வயரை புதைத்து கொங்கீரிட், மண் போன்றவற்றை போட்டு தான் செய்கின்றார்கள்' என்றார்.

கடல் தொழிலையே தங்களுடைய வாழ்வாதரமாகக் கொண்டிருப்பதாகக் கூறும் ரெனி வாஸ் இந்த திட்டத்தால் பாதிப்புகள் இருப்பதாகவும் தெரிவிக்கிறார். அது குறித்து பேசியவர், 'எங்களுடைய கடல் மட்டத்தை விடவும், நில மட்டம் தாழ்வாக உள்ளது. கரையோரத்தில் கொங்கீரிட் போடுவதனால் மழை நீர் வெளியில் போகாது. இந்த காற்றாலை அமைக்கப்பட்டதன் பின்னர் எங்களுடைய மக்கள் பாதிக்கப்படுகின்ற பெரிய பிரச்னை.'

ஆனால் இந்த காற்றாலை அமைக்கப்பட்டதன் பிறகு, முன்னர் இருந்த மீன்களின் தொகையும், இந்த காற்றாலை அமைக்கப்பட்டதன் பின்னர் இருக்கின்ற மீன்களின் தொகையும் மிகக் குறைவு. காடுகள் அழிக்கப்படுகின்றன. ஆயிரக்கணக்கான பனைகளை அழித்துக் கொண்டிருக்கின்றார்கள். இயற்கை வளங்களை அழித்துக் கொண்டிருக்கின்றார்கள்' என்றார்.

### மூன்று பிரதான பாதிப்புக்கள்

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து தாழ்வுபாடு தேவாலயத்தின் அருட்தந்தை ரெஜினோல்ட் பிபிசி தமிழுக்கு தெளிவுட்டினார். மூன்று பாதிப்புக்களை நான் சொல்லலாம் என்று நினைக்கின்றேன். முதலாவது இந்த காற்றாலைகள் பொருத்தப்பட்ட பிறகு, அவர்கள் சந்தைக்கு விடுகின்ற மீன்களின் தொகை குறைந்திருக்கின்றது என்று அவர்கள் சொல்கின்றார்கள். இது காலப் போக்கில் மிக குறைந்து தாங்கள் பிரதமானமாக கொண்டிருக்கின்ற கடல் தொழிலை கைவிட வேண்டி வரும் என்ற ஒரு அபாயம் இருக்கின்ற என்ற மாதிரி அவர்கள் பயப்படுகின்றார்கள்.

இரண்டாவது பிரச்சனை. இந்த காற்றாலை கட்டப்பட்ட கட்டுமான பணிகள் காரணமாக வழக்கமாக மழை காலத்தில் தேங்குகின்ற தண்ணீர் சொற்ப காலத்தில் வடிந்தோடி விடும். ஆனால் காற்றாலைகள் அமைக்கப்பட்டதன் பிறகு இந்த ஊருக்குள் தண்ணீர் தேங்கி நிற்கின்ற காலம் நீண்டு போய், மழை காலத்திற்கு பிறகு இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு தண்ணீர் இந்த கிராமத்தின் மூன்றில் இரண்டு பகுதிகளில் தேங்கியிருக்கின்றது. இதனால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதற்கான அபாயம் காணப்படுகின்றது.

மூன்றாவது, இந்த நாட்டினுடைய அபிவிருத்தி என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டாலும், காற்றாலைகளில் எடுக்கப்படுகின்ற பெருமளவிலான மண் அகழப்பட்டு வருகின்றது. இந்த மண் காற்றாலைக்கு பக்கத்தில் சேர்த்து வைத்திருக்கும் நிலையை மக்களோ நானோ காணவில்லை. இந்த மண் வெளியில் எடுத்து செல்லப்படுகின்றது. ஆகவே, காற்றாலை தான் இந்த திட்டத்திற்கு அடிப்படையா? கனிம மண் என்பது மன்னார் தீவுக்குள் இருப்பது என்பது உலகறிந்த விடயம்.

கனிம மண்ணை அகழ்வதற்காக காற்றாலை திட்டம் பயன்படுத்தப்படுகின்றதா என்ற அச்சம் எழுகின்றது. இது வரை அகழப்பட்ட மண்ணை காணவில்லை. இந்த மண் அகழ்வு தனிப்பட்டவர்களுடைய தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றதா? இது கனிம மண் அகழ்வுக்கான திட்டமாக இருந்தால், வேறு வேறு திட்டங்களை கொண்டு வந்து இதற்கும் அதிகமான மண்ணை அகழ்ந்து சென்றால், இந்த கிராமத்திற்குள் கடல் நீர் புகும் அபாயம் எழுந்துள்ளது' என அருட்தந்தை ரெஜினோல்ட் குறிப்பிடுகின்றார்.

### அதானி நிறுவனம் கனிம வளங்களைப் பெற்றுக் கொள்கிறதா?

காற்றாலை திட்டத்திலிருந்து வெளியேறிய அதானி நிறுவனம் கனிம வளங்களை பெற்றுக் கொள்வதற்காக வேறு நிறுவனங்களின் உதவியுடன் இதனை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றதா என்ற சந்தேகம் தமக்கு நிலவி வருவதாக மன்னார் மாவட்டத்தின் இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தின் தலைவர் சதுர்ஷன் தெரிவிக்கின்றார். (20ம் பக்கப் பார்க்க)




# பட்டு வேட்டிக் கனவில் கோவணமும் உருவப்படுவதை நாம் உணரவில்லை

சுதந்திரத்திற்கு பின், வடக்கு கிழக்கு மக்களின் கொல்லைப் புறங்களில் தேசியக்கட்சி ஊடுருவியுள்ளது!

வடக்கு கிழக்கு மலையகம் தமிழ் பேசும் கட்சிகளிடம் இருக்கட்டும். நாடு அநுரவோடு தான் இருக்க வேண்டும்.

2005இல் ரணிலை தோற்கடித்து, யதார்த்தவாதி என்ற மகுடத்துடன் மகிந்தவை ஆட்சிப்பீடம் ஏற்றிய தவறை தமிழ் பேசும் தேசிய இனங்கள் மீண்டும் ஒருமுறை செய்யக் கூடாது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்கு மக்கள் வாக்களித்து விட்டார்கள்

NPP வடிவில் வந்த இனவாதக்கட்சியான JVPI தோற்கடித்து விட்டார்கள்.''

திசை காட்டியுடன் வந்தவர்களை திசை தெரியாமல் அனுப்பி விட்டார்கள்.'

நாடு அநுரவோடு வடக்கு கிழக்கு தமிழரசோடு முன்னணியோடு — தமிழ்த் தேசியத்தோடு. என்ற முழக்கங்களை சமூக வலைத்தளங்களில் காணமுடிகிறது.

ஆனால் உள்ளூராட்சி சபைகளை NPP கைப்பற்றியேதோ, இல்லையோ வடக்கு கிழக்கில் இரண்டாவது பெரும் கட்சியாக நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களுடன் குறுகிய காலத்தில் எழுச்சி பெற்றிருக்கிறது என்பதனை நம் தேசப்பற்றாளர்கள் பரிந்து கொள்ளவில்லை. அல்லது புரிந்தும் புரியாதது போல் கடந்து செல்ல முனைகிறார்கள்.

வடக்கில் யாழ்ப்பாணத்தில் ITAK — 88,443 வாக்குகளைப் பெற்று 135 ஆசனங்களை பெற்றிருக்கிறது.

NPP — 56,615 வாக்குகளைப் பெற்று 81 ஆசனங்களை தனதாக்கியிருக்கிறது.

ACTC— 51,046 வாக்குகளைப் பெற்று 79 ஆசனங்களை பெற்று 3 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

DTNA — 35647 வாக்குகளை பெற்று 46 ஆசனங்களை பெற்று இருக்கிறது.

வவுனியா மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகளை NPP பின் தள்ளி முதலிடத்திற்கு சென்றிருக்கிறது. DTNAயுடன் தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஆட்சி அமைத்தால் மட்டுமே நகர சபையை காப்பாற்ற முடியும். மற்றும் ஒரு எல்லைப்புற மாட்டம் ஒன்று மெல்ல சாகிறது.

கிளிநொச்சி மாட்டத்தில் தமிழரசு மீண்டும் தப்பி பிழைத்திருக்கிறது. 29,173 வாக்குகளைப் பெற்று 36 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஆனால் அங்கும் NPP 10,562 வாக்குகளைப் பெற்று 12 ஆசனங்களுடன் 2ஆவது இடத்தை பிடித்திருக்கிறது. DTNA 8924 வாக்குகளைப் பெற்று 10 ஆசனங்களுடன் 3ஆவது இடத்திலும் ACTC 3,545 வாக்குகளைப் பெற்று 4 ஆசனங்களுடன் 4ஆவது இடத்திற்கும் தள்ளப்பட்டுள்ளது.

முல்லைத் தீவு மாவட்டத்திலும் 9,534 வாக்குகளை பெற்று 12 ஆசனங்களுடன் 2ஆவது இடத்திலும், 7,628 வாக்குகளைப் பெற்ற DTNA 3 ஆவது இடத்தையும் தக்க வைத்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 14,133 வாக்குகளைப் பெற்று 19 ஆசனங்களுடடன் NPP முதலிடத்திற்கு சென்றுள்ளது.

SJB 13,928 வாக்குகளைப் பெற்று 18 ஆசனங்களுடன் 2 ஆவது இடத்திலும், 11,056 வாக்குகளைப் பெற்ற ITAK 18 ஆசனங்களுடன் 3 ஆவது இடத்தையும், 9,864 வாக்குகளைப் பெற்ற DTNA 13 ஆசனங்களைப் பெற்று 4 ஆவது இடத்தையும் தக்க வைத்துள்ளது.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில்

ITAK 91,818 வாக்குகளைப் பெற்று 85 ஆசனங்களுடன் முதலிடத்திலும்,

NPP 53,002, வாக்குகளைப் பெற்று 44 ஆசனங்களுடன் 2ஆவது இடத்திலும், TMVP 39,791 வாக்குகளைப்பெற்று 37 ஆசனங்களுடன் 3 ஆவது இடத்திலும் SLMC 32,214 வாக்குகளைப் பெற்று 31 இடங்களுடன் 4 ஆவது இடத்திலும் தமது நிலைகளை தக்க வைத்துள்ளன.

இதில் முக்கியமானது முஸ்லீம் காங்கிரசிற்கு அளிக்கப்பட்ட வாக்குகளை தவிர்த்து, தமிழரசுக்கட்சியை எதிர்த்து 92793 வாக்களித்துள்ளனர். (NPPக்கும் TMVPக்கும் அளிக்கப் பட்ட வாக்குகள்)

திருகோணமலை அம்பாறை மாட்டங்களின் தேர்தல் முடிவுகளிலும் இதே நிலைமையே காணப்படுகிறது.

மக்கள் முட்டாள்கள் அல்ல. அவர்கள் தெளிவாகவே உள்ளனர். அரசியல் வாதிகளதும், அரசியல் கட்சிகளின் நிலைப்பட்டிலேயே தடுமாற்றம் காணப் படுகின்றது.

ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்ற தேர்தலில் அநுரவோடு, NPP யோடு பயணிக்க வேண்டும் என நாட்டு மக்கள் எடுத்த முடிவோடு வடக்கு கிழக்கு மலையக மக்களும் இணைந்து கொண்டனர்.

சுதந்திரத்தின் பின்னான 76 ஆண்டு கால ஆட்சிகளில் ஏற்பட்ட வெறுப்பின் உச்சமே அநுரவையும் NPPயினையும் மக்கள் தேர்ந்தெடுக்க காரணமாகியது.

இப்போது அநுரவுக்கும் NPPக்கும் மக்கள் எச்சரிக்கை மணி அடித்துள்ளதோடு தமிழ் கட்சிகளுக்கும் ஒரு செய்தியை வழங்கியிருக்கிறார்கள்.

தமிழரசுக்கட்சி, அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் கூட்டணி இவை யாவும் மாபெரும் பொதுக் கூட்டமைப்பாக உருவெடுக்க வேண்டும். தமிழ் பேசும் மக்களின் நலன் சார்ந்த பொது விடயங்களில் ஒருமித்து பயனிக்க வேண்டும்.

தனிப்பட்ட நபர்களின் நலன்கள், கட்சி நலன்களை புறந்தள்ளி மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்த வேண்டும்.

வடக்கு கிழக்கில் தமிழரசுக் கட்சிக்கு (307) அடுத்தபடியாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அதிக ஆசனங்களை (106) பெற்றிருக்கிறது. வவுனியா நகர சபையில் அதிக ஆசனத்தை பெற்றிருக்கிறது.

எல்லோரும் விட்டுக் கொடுப்புகளை மேற்கொண்டு குழறுபடிகள் இன்றி வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சபைகளை சிறப்பாக நிர்வகித்து கடந்த கால தவறுகளை களைந்து மீள் எழுச்சி பெற வேண்டும்.

எல்லோரும் நாடாளுமன்றம் செல்ல முடியாது.

எல்லோரும் தேசியப்பட்டியலில் இடம் பெறமுடியாது.

எல்லோரும் கட்சித் தலைவர்கள் ஆக முடியாது.

எல்லோரும் கட்சிகளின் செயலாளர்கள் ஆகமுடியாது.

எல்லோரும் முதலமைச்சர்கள் ஆக முடியாது.

எல்லோரும் உள்ளூராட்சி, மாகாண சபைகளின் உறுப்பினர்களாக முடியாது.

'நான் கூறியது போல் எதிர்கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து தேர்தலை எதிர் கொண்டிருந்தால் 50 முதல் 100 சபைகளை முழுமையாக கைப்பற்றியிருக்கலாம்' என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

இதனையே எனது பதிவுகளில் தொடர்ந்து அழுத்தி வருகிறேன். வடக்கு கிழக்கில் முக்கிய தமிழ்க் கட்சிகள் யாவும் ஓரணியில் இந்த தேர்தலை எதிர் கொண்டிருந்தால் வடக்கு கிழக்கின் அனைத்து சபைகளையும் கைப்பற்றி இருக்க முடியும்...

எதிர் வரும் தேர்தல்களில் தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டால், மாகாண சபைத்தேர்தல் இடம் பெற்றால் இரண்டு மாகாண சபைகளையும் கைப்பற்ற முடியும்.

நண்பர்களே ஐக்கிய தேசிக்கட்சியாகவோ, சிறீலங்கா சுதந்திரக்ட்சியாகவோ பொதுஜன பெரமுனவாகவோ JVPயை NPPயை எடை போடாதீர்கள். அவர்களின் உறுதியையும், அர்பணிப்பையும், விழ விழ ஏழுகின்ற எழுச்சியையும் கடந்தகால வரலாறு நிரூப்பிதிருக்கிறது.

நாடு அநுரவோடு நிற்கட்டும். ஊர் உங்களோடு தொடர்ந்தும் நிற்க வேண்டுமானால் உங்களின் அர்பணிப்பும், உறுதியும், விட்டுக் கொடுப்பும், தியாகமும் இன்றியமையாதது.

நடராஜா குருபரன் அவர்களது முகநூலில் இருந்து)

# இந்தியாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை தடை செய்யக் கோரி மனுத் தாக்கல்!

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அண்மையில் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வலுவற்றதாக்கி உத்தரவிடக் கோரி, வைத்தியர் குணதாச அமரசேகர உள்ளிட்ட குழுவினர் 07 மே 2025 புதன்கிழமை உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்றை தாக்கல் செய்தனர்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர், பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட அமைச்சரவை பெயரிடப் பட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் அண்மையில் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டின் அரசியலமைப்பிற்கும் சர்வதேச சட்டத்திற்கும் முரணானது என்று மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்கள் குறித்து பொதுமக்களுக்கு இன்னும் தெரிவிக்கப்படவில்லை என்றும், இது மக்களின் அரசியலமைப்பு உரிமைகளை மீறுவதாகும் என்றும் மனுவில் குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கையின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு தீங்கு விளைவித்துள்ளதாகவும், இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் கையெழுத்திடும் அரசின் நடவடிக்கை முற்றிலும் சட்டத்திற்கு எதிரானது என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதன் ஊடாக தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறும், அந்த ஒப்பந்தங்களை செயல்படுத்துவதைத் தடுக்கும் இடைக்காலத்



தடை உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் உயர் நீதிமன்றில் கோரியுள்ளனர். அத்துடன் அடிப்படை மனித உரிமைகளை மீறியதற்காக பிரதிவாதிகளிடம் இருந்து 20 லட்சம் ரூபாய் இழப்பீட்டை வசூலித்து உத்தர விடுமாறும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை இந்திய-பாகிஸ்தான் நெருக்கடி தொடர்பாக நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கும் அதேவேளையில்அணிசேரா அணுகுமுறை பின்பற்றப்படும் என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இருப்பினும் பயங்கரவாதம் எந்த வகையிலும் மன்னிக்கப் படவோ அல்லது ஆதரிக்கப்படவோ கூடாது என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

# மன்னாரில் காற்றலைத் திட்டமா? கனிம மணல் திட்டமா? மக்களின் குற்றச்சாட்டுக்கு அதானி நிறுவனம் விளக்கம்!

(18ம் பக்கத் தொடர்ச்சி) இது தொடர்பில் பிபிசி தமிழிடம் பேசியவர், "இந்த பெரிய இலங்கையில் வேறு எங்கும் இல்லாமல் வட மாகாணத் திற்குள் யாழ்ப்பாணத்திற்குள்ளும், மன்னாரிலும் காற்றாடிகளை போடுவது ஒரு சந்தேகம் எழுகின்றது. இந்த காற்றாடி திட்டத்தை காட்டி, கனிம மண்ணை அகழ்கின்றார்களா என்ற சந்தேகம் எழுகின்றது. இந்த காற்றாடி திட்டத்திற்கான டென்டரை அதானி நிறுவத்திற்கு வழங்கியிருந்தார்கள். அதானி நிறுவனம் வெளியேறியுள்ளது."



"எங்களுக்கு சந்தேகம் எழுகின்றது. இவர்கள் தான் வந்து வேறு நிறு வனங்களின் ஊடாக இதனை செய்கின் றார்களா என்ற சந்தேகம் எழுகின்றது. எதிர்ப்பு இருப்பதனால் எதிர்ப்பை சமாளிப்பதற்காக வேறு நிறுவனங்களின் ஊடாக அதானி நிறுவனம் தான் இதனை செய்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது." என்றார்.

கனிம மண் அகழ்விற்கு அரசாங்கம் அனுமதி வழங்காது என உறுதி வழங்கியுள்ள போதிலும், திரை மறை வில் கனிம மண் அகழ்வு இடம்பெற்று வருவதாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்கஸ் பிபிசி தமிழுக்கு தெரிவித்தார்.

கனிம மண் அகழ்வை எந்த விதத் திலும் அனுமதிக்க மாட்டோம் என்று உத்தரவாதமொன்றை அரசாங்கம் தந்தி ருக்கின்றது. ஆனால், திரை மறைவில் அரச அனுமதியோடு சில நடவடிக்கை




கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. தனியார்களிடம் காணிகள் வாங்கி, அந்த காணிக்குள் தாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற சட்ட பாதுகாப்பை வைத்து முயற்சி கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன." என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்கஸ் குறிப்பிட்டார்.

### மன்னார் மூழ்கும் அபாயத்தில் உள்ளதா?

மன்னார் மாவட்டத்தில் கனிம வளங் கள் அகழப்பட்டு வருவதாக யாழ்ப் பாணம் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை தலைவர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா பிபிசி தமிழுக்கு தெரிவிக் கின்றார். மன்னார் மாவட்டத்திற்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய அச்சுறுத்த லாக இந்த இல்மனைட் அகழ்வு காணப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தின் அதிஷ்டம் அல்லது துரதிஷ்டம் என்பது மன்னார் மாவட்டத்தில் மிகக் குறைந்த செல வோடு மிகச் செறிவான இல்மனை ட்டை பெறக்கூடிய நிலைமைகள் காணப்படுகின்றது. இலங்கையின் மற்றைய பகுதிகளிலும், உதாரணமாக மாணிக்க கங்கை, கும்புக்கன் ஓயா, புல்மோட்டை பகுதிகளிலும் இந்த இல்மனைட் காணப்பட்டாலும் கூட, அந்த பிரதேசங்களில் இந்த இல்மனை ட்டை எடுப்பதற்கான செலவுடன் ஒப்பிடும் போது மன்னார் மாவட்டத்தி னுடைய இல்மனைட் அகழ்வு என்பது மிகவும் செலவு குறைந்தது." அத்தோடு, அவற்றில் சில கனிமங்கள் காணப்படுகின்றன. எபடைட், டேடைல், சில்கோன், இல்மனைட் போன்ற கனிமங்கள் காணப்படுகின்றன. ஒரு தொன் மணல் அகழப்பட்டால், அந்த மணலில் குறிப்பிட்ட அளவு மணல் மட்டுமே மீண்டும் பயன்படுத்த முடியாத மணலாக காணப்படும். பெரியளவானவை கனிம மணலாக காணப்படுகின்றன. மன்னார் மாவட்டம் கடல் பரப்பிலிருந்து குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது."

இந்த கனிம மணல் அகழ்வின் ஊடாக மேலும் பரப்பளவு குறைக்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்தில் மன்னார் கடலு க்குள் மூழ்கின்ற நிலைமை காணப்படு கின்றது. இல்மனைட் அகழ்வு ஆரம்பி க்கப்பட்டு மூன்று நான்கு வருடங் களிலேயே மன்னார் மாவட்டம் கடல் நீருக்குள் மூழ்கின்ற அபாயம் காணப் படுகின்றது." என யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை தலைவர் கலாநிதி நாகமுத்து பிரதீப ராஜா பிபிசி தமிழுக்கு குறிப்பிடுகின் றார். மன்னார் மாவட்டத்தில் அகழப் படுகின்ற சிறியளவிலான மணல் அகழ்வு கூட, மன்னார் மாவட்டத்தின் நிலைமையை பெரிதும் பாதிக்கும் என யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தின் புவியியல் துறை தலைவர் கலா நிதி நாகமுத்து பிரதீபராஜா கூறுகின் றார்.

### அதானி நிறுவனம் - இலங்கை அரசு பதில்கள் என்ன

மன்னார் காற்றாலை திட்டத்திலிருந்து அதானி நிறுவனம் பின்வாங்கியதாக அறிவித்துள்ள போதிலும், மன்னாரில் அதானி நிறுவனம் மறைமுகமாக கனிம மணல் அகழ்வில் ஈடுபட்டு வருவதாக எழுப்பப்படும் குற்றச்சாட்டு குறித்து, பிபிசி தமிழ், அதானி நிறுவன த்திடம் வினவியது. இதற்கு அதானி நிறுவனம் மின்னஞ்சல் ஊடாக பதில் வழங்கியிருந்தது.

மன்னார் பகுதியில் அதானி நிறுவனம் காற்றாலை திட்டம் மற்றும் சுரங்கத் திட்டங்களில் ஈடுபட்டு வருவதாக உள்ளூர் ஊடகங்கள் வெளியிட்டு வரும் செய்திகள் குறித்து தாம் கவலையடைவதாக அதானி நிறுவனம் அனுப்பியுள்ள மின்னஞ்சலில் தெரிவிக் கப்பட்டுள்ளது.


இந்த திட்டத்திலிருந்து தமது நிறுவ னம் முழுமையாக விலகுவது தொடர் பில் இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை முதலீட்டு சபைக்கு அனுப்பி யுள்ள கடிதத்தில் குறிப்பிடப் பட்டதாக வும் அந்த நிறுவனம் குறிப்பிடு கின்றது.

தமது நிறுவனம் தொடர்பில் வெளி யாகியுள்ள இவ்வாறான செய்திகள் தவறானவை என அந்த நிறுவனம் கூறுகின்றது. அத்துடன் தமது நிறுவனம் சார்பில் ஒருபோதும் சுரங்கத் திட்டம் அல்லது முன்மொழிவு எது வும் முன் வைக்கப்படவில்லை என அந்த நிறுவனம் பிபிசி தமிழுக்கு அனுப்பியுள்ள மின்னஞ்சலில் குறிப் பிடப்பட்டுள்ளது.

### இலங்கை அரசு என்ன சொல்கின்றது?

மன்னார் மாவட்டத்தின் மேற்கொள்ளப் படுகின்ற காற்றாலை மின் உற்பத்தி திட்டம் மற்றும் கனிம மணல் அகழ்வு போன்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து, பிபிசி தமிழ் அரசாங்கத்தின் பதிலை பெற்றுக்கொள்ள பல்வேறு வகையிலும் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அதற்கு பொறுப்பான அமைச்சர்கள் பதிலளிக்கவில்லை. நன்றி:- பிபிசி

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இனுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# உள்ளூராட்சித் தேர்தல் 2025 - மன்னார் மாவட்ட முடிவுகள்

### மன்னார் பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 2,577 - 05 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,520 - 04 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 3,400 - 04 |
| தேசிய மக்கள் சக்தி | 2,944 - 03 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 2,124 - 02 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 1,450 - 02 |
| தமிழ்க் காங்கிரஸ் | 646 - 01 |
| சுயேச்சைக் குழு | 568 - 01 |

### மாந்தை மேற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 3,218 - 05 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,842 - 04 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2,792 - 04 |
| தேசிய மக்கள் சக்தி | 2,416 - 04 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 1,330 - 02 |
| தமிழ்க் காங்கிரஸ் | 700 - 01 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 492 - 01 |

### மன்னார் நகர சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 2,255 - 04 |
| தேசிய மக்கள் சக்தி | 2,123 - 03 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,943 - 03 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1,807 - 02 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,439 - 02 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 584 - 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 535 - 01 |

### முசலி பிரதேச சபை

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,767 - 05 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 2,441 - 04 |
| தேசிய மக்கள் சக்தி | 2,132 - 03 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1,482 - 02 |
| சுயேச்சைக் குழு | 611 - 01 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 551 - 01 |

### நானாட்டான் பிரதேச சபை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 4,518 - 06 |
| தமிழரசுக் கட்சி | 3,006 - 04 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,856 - 02 |
| சுயேச்சைக் குழு 1 | 380 - 02 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1,314 - 02 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 747 - 01 |

# உள்ளூராட்சித் தேர்தல் 2025 - வவுனியா மாவட்ட முடிவுகள்

### வவுனியா மாநகர சபை

| | |
|---|---|
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2,350 - 04 |
| தேசிய மக்கள் சக்தி | 2,344 - 04 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 2,293 - 04 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 2,185 - 03 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,088 - 02 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 647 - 01 |
| ஜனநாயகத் தேசியக் கூட்டணி | 630 - 01 |
| சுயேச்சைக் குழு 01 | 332 - 01 |
| சுயேச்சைக் குழு 02 | 326 - 01 |

### வவுனியா மாநகர சபை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 3,645 - 07 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,844 - 04 |
| சர்வஜன அதிகாரம் | 758 - 01 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 662 - 01 |
| சுயாதீனக் குழு 02 | 606 - 02 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 436 - 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 338 - 01 |

### வவுனியா வடக்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 2,650 - 06 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 2,210 - 05 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 1,696 - 04 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1,255 - 03 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 967 - 02 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 956 - 02 |
| சர்வஜன அதிகாரம் | 317 - 01 |

### வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 7,260 - 06 |
| இலங்கைத் தமிழரசுக் | 7,033 - 05 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | 3,949 - 03 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 3,870 - 03 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 3,436 - 02 |
| ஜனநாயகத் தேசியக் கூட்டணி | 2,075 - 02 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 1,901 - 01 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,482 - 01 |
| சுயாதீனக் குழு 02 | 1,285 - 01 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 1,173 - 01 |
| சர்வஜன அதிகாரம் | 1,123 - 01 |
| சுயாதீனக் குழு 03 | 768 - 01 |

### செங்கலடி செட்டிக்குளம் பிரதேச சபை

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,838 - 04 |
| தேசிய மக்கள் சக்தி | 2,085 - 03 |
| தமிழரசுக் கட்சி | 1,957 - 03 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1,661 - 02 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 1,573 - 02 |
| ஜனநாயகத் தேசியக் கூட்டணி | 1,225 - 02 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 626 - 01 |
| சுயேச்சைக் குழு 02 | 340 - 01 |

# உள்ளூராட்சித் தேர்தல் 2025 - கிளிநொச்சி மாவட்ட முடிவுகள்

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 3,040 - 05 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1,511 - 03 |
| தேசிய மக்கள் சக்தி | 1,349 - 03 |
| தமிழ்க் காங்கிரஸ் | 508 - 01 |

### பூநகரி பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 5,171 - 10 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 2,355 - 03 |
| தேசிய மக்கள் சக்தி | 1,884 - 03 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 971 - 01 |
| சுயேச்சைக் குழு 01 | 632 - 01 |
| சுயேச்சைக் குழு 02 | 486 - 01 |
| தமிழ்க் காங்கிரஸ் | 325 - 01 |

### பூநகரி பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 5,171 - 10 |
| தேசிய மக்கள் சக்தி | 2,355 - 03 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 1,884 - 03 |
| தமிழ்க் காங்கிரஸ் | 971 - 01 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 632 - 01 |
| சுயேச்சைக் குழு | 486 - 01 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 325 - 01 |

# உள்ளூராட்சித் தேர்தல் 2025 - முல்லைத்தீவு மாவட்ட முடிவுகள்

### துணுக்காய் பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக்கு கட்சி | 1,549 - 04 |
| தமிழ்க் காங்கிரஸ் | 1,082 - 02 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 804 - 02 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 605 - 01 |
| தேசிய மக்கள் சக்தி | 432 - 01 |
| சிறிலங்கா தொழிலாளர் கட்சி | 254 - 01 |
| சுயேச்சை | 388 - 01 |

### புதுக்குடியிருப்பு பிரதேச சபை

| | |
|---|---|
| தமிழரசுக்கு கட்சி | 10,816 - 11 |
| தேசிய மக்கள் சக்தி | 4,028 - 04 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 2,652 - 02 |
| சுயேச்சைக் குழு | 2,491 - 02 |
| தமிழ்க் காங்கிரஸ் | 1,174 - 01 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,025 - 01 |
| இலங்கைத் தொழிலாளர் கட்சி | 658 - 01 |

முல்லைத்தீவு மாவட்ட முடிவுகள்


மாந்தை கிழக்குப் பிரதேசசபை முடிவுகள்

கரைத்துறைப்பற்று பிரதேச சபை முடிவுகள்


| | |
|---|---|
| தமிழரசுக்கு கட்சி | 1,364 - 04 |
| தமிழ்க் காங்கிரஸ் | 808 - 02 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 500 - 02 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 990 - 03 |
| தேசிய மக்கள் சக்தி | 607 - 02 |

| | |
|---|---|
| தமிழரசுக்கு கட்சி | 6,306 - 07 |
| தேசிய மக்கள் சக்தி | 4,407 - 05 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 3,672 - 04 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,962 - 01 |
| சுயேச்சைக் குழு – 02 | 01 |


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். உடல் ஆரோக்யம் உண்டாகும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். அலைச்சல் இருக்கும். பணவரவும் இருப்பதுடன் பயணங்கள் செல்லவும் நேரலாம். தொழில் வியாபாரத்தில் புத்தி சாதூரியத்தால் கூடுதல் லாபம் கிடைக்கும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் சாதகமான பலன் தரும்.





ரிஷபராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நற்பலன்கள் உண்டாகும். வாழ்க்கையில் எதிர் பாராத திடீர் திருப்பங்கள் உண்டாகலாம். சந்திரன் சஞ்சாரத்தால் மனதுக்கு பிடித்தமான காரியங்களை செய்து மனநிறைவடைவீர்கள். வேலை தேடி கொண்டு இருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். மனதில் இருந்த கவலைகள் நீங்கி அலுவலக வேலைகளில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத வளர்ச்சி ஏற்படும்.





மிதுனராசி அன்பர்களே! எண்ணிய காரியம் ஈடேறும். காரிய அனுகூலம் உண்டாகும். சந்திரன் சஞ்சாரத்தால் எதிர்பாராத சந்திப்புகள் ஏற்படலாம். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். தன்னம்பிக்கை உண்டாகும். அடுத்தவருக்கு உதவி செய்து அதன் மூலம் மதிப்பு உயரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். கை நழுவி சென்றவை முயற்சிகள் சாதகமான பலனை தரும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும்.





கடகராசி அன்பர்களே! எதிலும் எச்சரிக்கையாக செயல்படுவது அவசியம். அடுத்தவரை நம்பி எதிலும் ஈடுபடாமல் இருப்பது நன்மையை தரும். ஆன்மிக ஸ்தலங்களுக்கு செல்வீர்கள். வழக்கு விவகாரங்கள் சாதகமாக முடியும். புதிய நண்பர்கள் மூலம் நன்மை உண்டாகும். தந்தையின் உடல்நிலையில் கவனமாக இருப்பது நல்லது. கடன் விவகாரங்கள் கால தாமதமாகும். வர வேண்டிய பணம் தாமதப்படலாம்.





சிம்மராசி அன்பர்களே! எந்த விஷயத்திலும் உடனடி தீர்வு காண முடியாத இழுபறி நிலை காணப்படும். ஆனால் இந்த நிலை மாறி நன்மை ஏற்படும். மனதில் திடீர் கவலை தோன்றும். சகோதரர் வழியில் மனவருத்தம் தரக்கூடிய சம்பவம் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது.




கன்னிராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கும். புதிய தொடர்புகள் உண்டாகும்.சிலர் புதிய வீடு கட்டும் பணியை தொடங்குவர். உத்யோகத்தில் பதவி உயர்வு, தேடி வரும். கனவு தொல்லையால் நீண்ட நேரம் கண் விழிக்க நேரிடும். தந்தையின் உடல்நிலையில் கவனம் தேவை. சகோதரர் வழியில் மனவருத்தம் உண்டாகலாம். திடீரென்று கவனம் தடு மாறலாம். தொழில் வியாபாரத்தில் உழைப்பிற்கு பின் நல்ல பலன் பெறுவார்கள்,





துலாம்ராசி அன்பர்கள் அனுகூலமான பலன்கள் உண்டாள! கும். எடுத்த காரியங்களில் தொய்வு ஏற்பட்டாலும் பின்னர் வேகம் பிடிக்கும். வீண்மனசஞ்சலம் உண்டாகும். தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். அதே நேரத்தில் புதிய வாடிக்கையாளர் பிடிக்க கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். உத்யோகத்தில் தங்களது பணிகளை தாமதம் இல்லாமல் செய்து முடிப்பீர்கள். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குழந்தைகளால் மனசஞ்சலம் ஏற்பட்டு நீங்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! காரிய தடைகள் நீங்கும். திட்டமிட்டபடி எல்லாம் நடக்கும். ஆடம்பரமான பொருட்களை வாங்குவீர்கள். கடன் தொல்லை குறையும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத தடைகள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பணம் தாமதமாக வந்த சேரும். உத்யோகத்தில் பல தடைகளை சந்திக்க வேண்டி இருந்தாலும் முடிவில் வெற்றி உங்கள் பக்கமே இருக்கும். கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் சுப செலவுகள் உண்டாகும்.








தனுசுராசி அன்பர்களே! மனோ தைரியம் அதிகரிக்கும். வீண் கவலைகள் ஏற்பட்டு நீங்கும். வழக்கு விவகாரங்களை தள்ளி போடுவது நல்லது. திடீர் உடல்நலபாதிப்பு ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் நிதானமான போக்கு காணப்படும். பணவரத்து தாமதப்படும். தொழில் வியாபாரத்திற்காக கடன் வாங்க நினைப்பதை தள்ளி போடுவது நல்லது. உத்யோகத்தில் வேலை பளுவால் மனசலிப்பும் உண்டாகும். இறுதியில் இந்தநிலை மாறி நன்மை ஏற்படும்.




மகரராசி அன்பர்களே! சுப பலன்கள் உண்டாகும். எடுத்த காரியம் தாமதத்திற்கு பிறகு சாதகமான பலன் தரும். அவசரப்பட்டு வாக்குறுதி கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத திடீர் செலவு உண்டாகலாம். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான விவகாரங்கள் தாமதமாக நடைபெறும். புதிய ஆர்டர்கள் கிடைத்தாலும் அதை உடனடியாக நிறைவேற்ற பாடுபட வேண்டி இருக்கும்.




கும்பராசி அன்பர்களே! மனதில் தைரியமும், உற்சாகமும் கூடும். சாதகமான பலன்கள் இருக்கும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வாய்க்கு ருசியாக உணவுகளை உண்பீர்கள். நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். வெளி வட்டார தொடர்புகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களின் பொறுப்புகள் அதிகரிக்கும். கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும்.




மீனராசி அன்பர்களே! எதிர் பார்த்த வேலைகள் வேகமாக நடந்து முடியும். இது வரை இருந்த அலைச்சல்களும் குறையும். செலவு அதிகரிக்கும் அதே நேரத்தில் வரவும் இருக்கும். யாருக்கும் எந்த வாக்குறுதியும் அளிக்காமல் இருப்பது நன்மை தரும். எதிர்ப்புகள் அகலும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றத்திற்கு தேவையான பண உதவி கிடைக்கும். உத்யோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## சங்கின் ஆதரவைப் பெற முயற்சி?

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைக்க ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஆதரவை பெறுவதற்காக தமிழரசு கட்சி மற்றும் தமிழ் தேசிய பேரவை ஆகியவை அக் கட்சியுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன.

பல சபைகளில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஆதரவை பெரும் கட்சிகளே ஆட்சி அமைக்க கூடிய சூழ்நிலை காணப்படுவதனால் அக் கட்சியின் ஆதரவு பெறுவதற்காக தமிழரசு கட்சி மற்றும் தமிழ் தேசிய பேரவை ஆகியவை கடந்த இரு தினங்களாக பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் இணை தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தர்மலிங்கம் சித்தர்த்தனிடம் கேட்ட போது உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு தமக்கு ஆதரவு தருமாறு பல்வேறு தரப்பினரும் எம்முடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர். எமது கூட்டணியில் உள்ள ஏனைய தரப்பினருடனும் கலந்துரையாடி தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மலினப்படுத்தாத தரப்பினருக்கு ஆதரவு வழங்குவோம் என தெரிவித்தார்.

## பாராளுமன்றத்தில் சிறப்புரிமையைப் பயன்படுத்தி பேசியதை வெளியில் வந்து பேசிப் பார் -சுமந்திரன்

சலுகைகளுக்காக வாக்களிப்பவர்கள் தமிழ் மக்கள் அல்ல என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய தினம் 08 மே 025 வியாழக்கிழமை பிமல் ரத்னாயக்க உரையாற்றுகையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி கசிப்பும், பணமும் வழங்கியே தேர்தலில் அதிகளவு வாக்குகளை பெற்றதாக குறிப்பிட்டு இருந்தார். குறித்த கருத்து தொடர்பில், பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தமிழ் அரசுக் கட்சி சாத்வீக கட்சி மாத்திரமில்லை, சமூக அக்கறையுள்ள கட்சியுமாகும். 75 ஆண்டுகளுக்கு மேலான தமிழ் அரசுக் கட்சியின் வரலாற்றை அமைச்சர் பிமல் எடுத்துப் பார்க்க வேண்டும். மது ஒழிப்புக்காக இயக்கங்களை கொண்டுள்ளதுடன் பல விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது.

அதனால் தான் மதுபான சாலைகளை புதிதாக அமைப்பதற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுப்பதுடன் நீதிமன்றங்கள் ஊடாக அவற்றை தடுக்க நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றது.

ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவான மூன்றாம் நாள் அமைச்சர் பிமல் தெரிவித்திருந்தார், முன்னைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அரசியல் சலுகையாக வழங்கியிருந்த மதுபான அனுமதிப் பத்திரங்களுக்கான சிபார்சினை, வழங்கியிருந்த அரசியல்வாதிகளின் பெயர்களை வெளியிடுவோம் என, ஆனால் இன்னும் அதனை வெளியிடவில்லை. யார் மீதான பயத்தினால் 6 மாதங்கள் கடந்தும் அதனை அவர் வெளியிடவில்லை.

தேசிய மக்கள் சக்தி மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள வெறுப்பினை சகிக்க முடியாமல் அவர்களது உணர்வுகளை அவமதித்து பிழையான சாட்டுதல்களை வெளியிட்டுள்ள அமைச்சரின் கருத்து அவரது சிறுமையை வெளிப்படுத்துகிறது. தமிழ் அரசுக் கட்சி மீதான இந்த குற்றச்சாட்டை நாடாளுமன்றுக்கு வெளியில் ஆதாரங்களுடன் அமைச்சர் வெளிப்படுத்த வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

## பாராளுமன்றத்தில் இருந்து அர்ச்சுனா வெளியேற்றம்!

சபை நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் இடையூ று ஏற்படுத்திய குற்றச்சாட்டில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் படைக்கள சேவிதரால் சபையில் இருந்து வெளியேற்பட்டார். பாராளுமன்றம் வியாழக்கிழமை (08) காலை 9.30 மணிக்கு கூடியது முதல் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் பல்வேறு விடயங்களுக்கும் ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பி கருத்துக்களை முன் வைத்துக் கொண்டிருந்தார். எனினும் அவருக்கு எதிராக ஏற்கனவே அமுலில் உள்ள அவரின் உரைகளை நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான தடை காரணமாக அவரின் கருத்துக்கள் வெளிவரவில்லை.

இவ்வாறாக ஒவ்வொரு விடயங்களுக்கும் ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பியும் இடையீட்டு கேள்விகளை முன்வைத்தவாறும் அர்ச்சகனா இருந்த நிலையில் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 'அ' அட்டவணையின் ஒழுங்கு விதிகளின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பான விவாதத்தில் சபைமுதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க உரையாற்றிக்கொண்டிருந்தபோது அர்ச்சுனா தொடர்ந்து ஒழுங்குப்பிரச்சினைகளையும் இடையூறுகளையும் ஏற்படுத்தினார்.

இதனால் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, அர்ச்சுனாவுடன் கடும் தர்க்கத்தில் ஈடுபட்ட நிலையில் சபைக்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்த அரவிந்த் செனரத் எம்.பி. அர்ச்சணாவைக்கு இரு தடவைகள் எச்சரித்த போதும் அவர் எதனையும் காதில் வாங்கி கொள்ளவில்லை. அவரை சபையிலிருந்து வெளியேற்ற நேரிடும் எனவும் எச்சரித்து இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதும் அர்ச்சுனா அதனை கருத்திற் கொள்ளவில்லை. நிலையில் அவரை சபையிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு சபைக்கு தலைமை தாங்கிய உறுப்பினர் அறிவித்தார்.

## உலக வங்கி இலங்கைக்கு 1பில்லியன் டொலர் சலுகைக் கடனுதவி

(24ம் பக்கத் தொடர்ச்சி) ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்புடன்கூடிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறோம்' எனக் குறிப்பிட்டுள்ளார். அதன்படி 3 வருட கால அடிப்படையில் வலுசக்தி துறைக்கு 185 மில்லியன் டொலர்களும், தனியார் துறை முதலீட்டுக்காக 800 மில்லியன் டொலர்களும், விவசாயத்துறை மேம்பாட்டுக்காக 100 மில்லியன் டொலர்களும், சுற்றுலாத்துறைக்காக 200 மில்லியன் டொலர்களும், பிராந்திய அபிவிருத்திக்காக 200 மில்லியன் டொலர்களும் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com






# மொன்றியல் நகரம் மே 18ஐ தமிழின அழிப்பு நாளாக அங்கீகரித்தது






Côte-des-Neiges–Notre-Dame-de-Grâce பெருநகராட்சி மன்றம், மே 18-ஐ தமிழ் இனவழிப்பு நினைவேந்தல் நாளாக அங்கீகரிக்கும் தீர்மானத்தை அதிகாரபூர்வமாக நிறைவேற்றியுள்ளது. இந்த தீர்மானம், தமிழின அழிப்பில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக கல்வி மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. மே 18ஆம் நாள் - இழந்த அப்பாவி உயிர்களின் நினைவைப் போற்றவும், அவர்களின் கதைகள் மற்றும் மீள்தன்மைக்கு சாட்சியமளிக்கவும் உலகளவில் தமிழ் இனவழிப்பு நினைவேந்தல் நாளாக நினைவுகூரப்படவுள்ளது.

இவ்வரலாற்றுச் சிறப்பு மிக்க தருணம், கனடா முழுவதிலும் மற்றும் உலகளாவிய தமிழ்ச் சமூகத்திற்கும் அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பல ஆண்டுகளாக, தமிழர் இனப்படுகொலைக்கு நீதியும் அங்கீகாரமும் வேண்டும் எனத் தமிழர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இந்த அங்கீகாரம், தமிழர்களின் துயரங்களைக் களையக் கூடிய முக்கியமான படிநிலையாகும்.

இத்தீர்மானம் சாத்தியமாகக் காரணமாக இருந்த, சுபிதா தர்மகுலசேகரம் தலைமையில் செயலாற்றிய மொன்றியல் தமிழ்ச் சமூகத்தின் உறுதியான தலைமையையும், இடையறாத போராட்டத்தையும் நான் மனமாரப் பாராட்டி அங்கீகரிக்க விரும்புகிறேன்' என ஒன்ராறியோ மாநில சுகாதார அமைச்சின், உளநலத் துறையின் இணை அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

2009 மே மாதம், இலங்கை அரசு முள்ளிவாய்க்காலில் தமிழர்களுக்கு எதிராக கிளஸ்டர் குண்டுவீச்சுகள், கடத்தல்கள், பாலியல் வன்கொடுமைகள், படுகொலைகள் மற்றும் உணவு, மருந்துகள் போன்றவற்றை தடுத்து நிறுத்தி இனவழிப்பு நடவடிக்கை முன்னெடுத்து வருகின்றது. எதிர் வரும், மே 12 முதல் 18 வரை, ஒன்ராறியோ முழுவதும் தமிழின அழிப்பு அறிவுட்டற் கிழமை ஒன்ராறியோவிலுள்ள அனைத்துக் கல்விச்சபைகளிலும் அனுசரிக்கப்படும்.

தமிழின அழிப்பு அறிவுட்டற் கிழமை, நடைபெற்ற தமிழின அழிப்பை அங்கீகரிக்கவும், இழந்த உயிர்களை நினைவு கூரவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையை அளிக்கவும், அவர்களின் உளநல ஆற்றுப்படுத்தலுக்கான செயல்முறையைக் கொண்டு வரவும் உதவுகிறது. புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனவழிப்பை அங்கீகரித்த முதல் அரச கட்டமைப்பு ஒன்ராறியோ மாநிலமாக விளங்குகின்றது.

## உலக வங்கி இலங்கைக்கு 1பில்லியன் டொலர் சலுகைக் கடனுதவி

இலங்கையின் தனியார்துறை மேம்பாட்டுக்காகவும், வேலை வாய்ப்பு உருவாக்க முயற்சிகளை ஊக்குவிப்பதற்காகவும் 3 வருடகாலத்துக்கு ஒரு பில்லியன் டொலர் சலுகைக் கடனுதவியை வழங்குவதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

உலக வங்கிக் குழுமத்தின் தலைவர் அஜய் பங்கா உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற் கொண்டு 07 மே 2025 புதன்கிழமை நாட்டுக்கு வருகைதந்திருந்தார். அவருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் இடம் பெற்ற சந்திப்பை அடுத்து புதன்கிழமை இரவு உலக வங்கி மேற்குறிப்பிட்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளது. குறைந்த வட்டியுடனான இச்சலுகைக் கடனுதவியானது வலுசக்தி, விவசாயம், சுற்றுலா மற்றும் பிராந்திய அபிவிருத்தி என்பன உள்ளடங்கலாக வேலைவாய்ப்பு மற்றும் முதலீடு சார்ந்த உயர் வாய்ப்புக்களையுடைய துறைகளை இலக்காகக்கொண்டு, அவற்றின் மேம்பாட்டுக்காக வழங்கப்படவுள்ளது. இதனூடாக பொருளாதார வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்கும், உள்நாட்டு உற்பத்தித்துறையை வலுப்படுத்துவதற்கும், நீண்டகால வளர்ச்சிக்குப் பங்களிப்புச்செய்யக்கூடியவாறான தனியார் முதலீடுகளை உள்ளீர்ப்பதற்கும் எதிர்பார்க்கப்படுவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உலக வங்கியின் இந்த நிதியளிப்பு இலங்கை மக்கள் மீதான முதலீடாகும். இந்நிதியுதவி வேலைவாய்ப்பு உருவாக்கத்துக்கும், சிறிய வணிகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும், நாடளாவிய ரீதியில் புதிய வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கும் பங்களிப்புச் செய்யும். நாம் இந்த உதவியின் ஊடாக சமுதாய மட்டத்தில் உண்மையான மாற்றத்தை(22ம் பக்கம் பார்க்க)

